பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 01 சனிக்கிழமை 17.07.2021 கதிர் 254

### இது ரகசியம் அல்ல!

புதிய நிதியமைச்சராக அரசுக்குள் பஸில் ராஜபக்ஷ நுழைந்தமையை அடுத்து பல்வேறு புதிய நகர்வுகள் மளமளவென்று நடக்கின்றன என தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

எல்லாமே நேரத்துடன் 'well set' என்கின்றன

பக்கம்02

## வடக்கு, கிழக்கில் சகலருக்கும் இரு மாதங்களுக்குள் தடுப்பூசி

### கோட்டாவுடனான சந்திப்பையடுத்து நாமல் உறுதி



வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் இரண்டு மாதக் காலப்பகுதிக்குள் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

– இவ்வாறு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல்

☞2

## இலங்கையில் மேலும் 41 பேர் கொரோனாவால் உயிரிழப்பு

இலங்கையில் மேலும் 41 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 23 ஆண்களும், 18 பெண்களும் அடங்குக்கின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட 9 ஆண்களினதும், 3 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதில், 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 14 ஆண்கள் மற்றும் 15 பெண்களின் மரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 702 ஆக அதிகரித்துள்ளது.

☞2

# ஜோசப் ஸ்டாலின் உட்பட 16 பேர் நேற்று விடுவிப்பு

## தொடர் போராட்டத்துக்குக் கிடைத்தது வெற்றி



முல்லைத்தீவு – கேப்பாப்பிலவு விமானப்படை முகாமிலுள்ள தனிமைப்படுத்தல் முகாமுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 16 பேர் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த 8ஆம் திகதி கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்ட ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். இதையடுத்து அவர்களை வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

☞2

### யாழ்.சண்டிலிப்பாயில்

## 9 மாத குழந்தையையும் சாகடித்தது கொரோனா

(இ.கலையமுதன்)

யாழ்.,சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒன்பது மாதப் பெண் குழந்தை ஒன்று உயிரிழந்த நிலையில் கொரோனாத் நோய்த் தொற்றுள்ளமை சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த குழந்தை திடீர் சுகயீனம் காரணமாக நேற்றுமுன்தினம் சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

எனினும்,

☞2

## பருத்தித்துறையில் வங்கி முகாமையாளர் உள்ளிட்ட மேலும் 14 பேருக்குக் கொரோனா

(பருத்தித்துறை நிருபர்)

பருத்தித்துறை நகர் வர்த்தகத் தொகுதியில் மேலும் 14 பேருக்குத் தொற்றுள்ளமை நேற்றைய பரிசோதனைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர் வர்த்தக தொகுதியில் 23 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 7 வர்த்தகர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டுள்ளது.

மேலும் 40 பேரிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 7 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் தனியார் வங்கியொன்றின் முகாமையாளர், குறித்த வங்கியின் ஊழியர் ஒருவர், நகர சபை ஊழியர்கள் இருவர் மற்றும் பொதுமக்கள் மூவர் அடங்குகின்றனர்.

பருத்தித்துறை நகர் நேற்று முன்தினம் மாலை தொடக்கம் முடக்கப்பட்டு

☞2

## பரு.நகரில் அடையாளம் காணப்பட்ட வர்த்தகர்களில் அறுவர் தலைமறைவு

### சொந்த ஊர்களுக்குச் சென்றிருக்கின்றார்களாம்; பொலிஸாரின் உதவியை நாடியது சுகாதாரத் துறை

(பருத்தித்துறை நிருபர்)

பருத்தித்துறை நகர் வர்த்தகத் தொகுதியில் மேலும் 7 வர்த்தகர்களுக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்றைய பரிசோதனைகளில் கண்டறியப்பட்ட நிலையில் அவர்களில் 6 பேர் தலைமறைவாகியுள்ளனர்.

அவர்கள் அனைவரும் புத்தளம் மற்றும் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் என்பதால் பொலிஸார் ஊடாக அவர்களைக் கைதுசெய்ய சுகாதாரத்து

☞2

## வல்வெட்டித்துறை நாவலடியில் நேற்று ஏழு பேருக்குத் தொற்று

(பருத்தித்துறை நிருபர்)

வல்வெட்டித்துறை நாவலடி – கெருடாவில் வடக்கு கிராம அலுவலகர் பிரிவில் 7 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாவலடியில் நேற்று 30 பேரிடம் எழுமாறாக முன்னெடுக்கபட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 7 பேருக்குத் தொற்றுள்ளமை

☞2

## வனவளத் திணைக்களத்தின் பிடியிலுள்ள 5,000 ஏக்கர் காணிகளை விடுவிக்க சம்மதம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தகவல்



(இ.கலையமுதன்)

வடக்கு மாகாணத்தில் வன வளத் திணைக்களத்தின் பிடியிலிருக்கும் காணிகளை, விவசாய நடவடிக்கை, கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை,

☞2

## வட்டுக்கோட்டை சிகிச்சை நிலையத்துக்குள் பியர்களுடன் புகுந்தவர்கள் மடக்கிப் பிடிப்பு

(இ.கலையமுதன்)

யாழ்.வட்டுக்கோட்டை கொரோனா சிகிச்சை நிலையத்துக்குள் பியரின்களுடன் புகுந்த இருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் கைதுசெய்ய வட்டுக்கோட்டை பொலிஸார் ஆரம்பத்தில் பின்னடித்த நிலையில் பின்னர் அவர்கள் இருவரையும்

☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடயமறிந்த வட்டாரங்கள். பஸில் ராஜ பக்ஷ அமெரிக்காவில் இருந்து திரும்ப முன்னரே யோகர் சுவாமிகள் சொன்ன மாதிரி பல விடயங்களும் 'எப்பவோ முடிந்த காரியம்' ஆகிவிட்டன என்கின்றன அத்தரப்புகள்.

நடப்பவற்றைப் பார்க்கும் போது எனக்கும் அப்படித்தான் தோன்றுகின்றது.

ஜி.எஸ்.பி. வரிச் சலுகை நீக்கப்படலாம், சர்வதேச நாணய நிதியத்தின் கடன்கள் மறுக்கப்படலாம் என்ற பின்னணியில் பொருளாதார ரீதியில் மிக மோசமான பின்னடைவு – ஆபத்து – நிலையில் நாடு சிக்கியிருப்பதை அரசுத் தலைமை நன்கு உணர்ந்துள்ளதாகத் தெரிகின்றது.

இந்த ஆபத்துகள் ஏற்படாத வகையில் – அவற்றைத் தவிர்க்கும் விதத்தில் – காரியங்களை விரைந்து முன்னெடுப்பதற்கான முழு அதிகாரமும் பஸில் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

கெரவலப்பிட்டியவில் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்கும் பிரதான திட்டம் அமெரிக்க முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு சத்தம் சந்தடியில்லாமல் வழங்கப்பட்டுள்ளது. பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் அவர் பங்கு பற்றிய முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. அந்தக் கூட்டத்துக்கு வந்த பின்னர்தான் மின்சார வலு அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கே அது பற்றிய தகவலே தெரியுமாம். பஸில் அமெரிக்காவில் இருந்த போதே இது 'எப்பவோ முடிந்த காரியம்' ஆகியிருக்கும் எனத் தோன்றுகின்றது.

கொவேக்ஸ் திட்டத்தின் கீழ் அமெரிக்கா வழங்கும் 15 லட்சம் மொடர்னாத் தடுப்பூசிகள் திடுதிப்பென நேற்று கொழும்பு வந்து சேர்ந்ததுவும் கூட இதுபோல எப்பவோ முடிந்த காரியத்தின் விளைவு என்றே தெரிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் நேற்று முன்தினம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியின் கொழும்பு வீட்டுக்குச் சென்று சந்தித்தார்.

*"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசுக்கு நீங்களும் அழுத்தம் கொடுங்கள், நாங்களும் அழுத்தம் கொடுக்கின்றோம்."* – என்று அச்சமயம் அமெரிக்கத் தூதுவர், தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்களிடம் கூறியிருந்தார் என்று தகவல்.

இதுவும் கூட 'எப்பவோ முடிந்த காரியத்தின்' ஓர் அங்கம் போன்றுதான் தோன்றுகின்றது.

யோகர் சுவாமி கூறியபடி, இங்கு பல விடயங்கள் 'எப்பவோ முடிந்த காரியங்களாக' அரங்கேறுகின்றன. அவற்றை 'யாமறியோம்', அவை 'முழுவதும் உண்மை', அவற்றால் 'ஒரு பொல்லாப்புமில்லை'.

யாமறியாவிட்டாலும், ஒரு பொல்லாப்புமில்லா விட்டாலும், அமெரிக்க அனுசரணையுடன்தான் பல விடயங்கள் நடக்கின்றன என்பது முழுவதும் உண்மை.

நிதி அமைச்சராகப் பதவியேற்ற பஸில் ராஜபக்ஷ தொடர்பில் இன்னொரு கொசுறுத் தகவல்.

பதவியேற்றதும், நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள – தமது பொதுமக்கள் கூட்டணியைச் சேர்ந்த – முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களை அழைத்து அவர் கலந்தாலோசனை நடத்தியிருக்கின்றார்.

தமது மொட்டுக் கட்சியை பலப்படுத்துவதற்கு அவர்களின் பங்களிப்புத்தான் முக்கியமானது என்பதை உணர்ந்தவர் அவர். அதனால்தான் அந்தச் சந்திப்பும் ஆலோசனையும்.

மாகாண சபைத் தேர்தல்கள், இப்போதைக்கு இல்லை எனப் பிரதமரும், அரச உயர்வட்டாரங்களும் வெளியில் கருத்து வெளியிட்டு வரும் சூழலில் மேற்படி கூட்டத்தில் பஸில் வேறு விதமாக உரைத்திருக்கின்றார்.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு இப்போதே தயாராகுங்கள் என்ற சாரப்பட அவர் உஷார் ஏற்றியிருக்கின்றார்.

பஸிலின் பேச்சைக் கேட்டு அங்குள்ள முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் உஷாரடைந்தனரோ இல்லையோ, இங்கு எம்.பி. பதவிகளைக் கோட்டை விட்டவர்கள் எல்லாம் முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்கள் கனவோடு ஆரவாரங்களை மீள ஆரம்பித்து விடுவார் என்பது நிச்சயம்.

எது, எப்படி என்றாலும், இதுவும் எப்பவோ முடிந்த காரியம்தான்.

★ ★ ★

யாழ்ப்பாண நிலைமை குறித்து அரச உயர்பீடம் மிக உன்னிப்பாகக் கவனிப்பதாகத் தகவல்.

இங்கு அரச நிர்வாகத்தில் இடம்பெறும் குளறுபடிகள் தொடர்பில் வெளிப்படையாக முறைப்பட்டு, உண்மைகளை அம்பலப்படுத்தும் கீழ் மட்ட அரச அலுவலர்களை அரசியல் ரீதியாகப் பழிவாங்கி, மாட்டி விடும் கைங்கரியம் ஆரம்பிக்கப்படிருப்பதாக தகவல் கிடைத்துள்ளமையை அடுத்து அது குறித்து புலனாய்வு நடத்தப் பணிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

கீழ்நிலை அலுவலர்களுக்கு தொல்லை கொடுக்க முனையும் பிரதேச செயலர்களும் கூட பந்தாடப்படும் சூழல் இருப்பதாகத் தெரிகின்றது.

இது பற்றிய விவர அறிக்கை ஒன்று அடுத்த வாரத்தில் அரச தலைமைப் பீடத்துக்குக் கையளிக்கப்படவிருக்கின்றது.

கூண்டோடு பலர் பந்தாடப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

– மின்னல் –

---

## ஜோசப் ஸ்டாலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதிலும் போராட்டங்களை முன்னெடுத்தனர். அதேவேளை, ஆசிரியர் சங்கங்கள், இணையவழி கற்பித்தல் புறக்கணிப்பு தொழிற்சங்க நடவடிக்கையையும் கடந்த 5 நாள்களாக மேற்கொண்டன.

இந்நிலையில், 8 நாள்களின் பின்னர், முல்லைத்தீவு – கேப்பாப்பிலவு விமானப்படை தனிமைப்படுத்தல் முகாமில் இருந்து அவர்கள் நேற்று மாலை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

---

## வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை விரைவுபடுத்துவது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி இந்த விசேட திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளேன்.

அதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 30 வயதுக்கும் மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – என்றார்.

---

## 9 மாத குழந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கிருந்து நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது.

முதலாவது பி.சி.ஆர். பரிசோதனையில் மூலக்கூறுகள் போதாது எனத் திருப்பப்பட்டது. மீண்டும் எடுக்கப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் குழந்தைக்குக் கொரோனா நோய்த்தொற்று இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த முதலாவது குழந்தை இதுவாகும்.

---

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வங்கிகள் மட்டும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வனவளத் திணைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீர்வேளாண்மை முயற்சிகளுக்காக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நீர்வேளாண்மை நடவடிக்கைகளுக்காக 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை வடக்கில் விடுவிப்பதற்கு அரசிடம் சம்மதம் பெறப்பட்டிருக்கின்றது.

– இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் மேம்பாடு, நீர் முகாமைத்துவம், விவசாயம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக அவர் நடத்திய விசேட கலந்துரையாடலின்போது இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில், கடற்றொழில் திணைக்களம் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களங்களின் பிரதிப் பணிப்பாளர்கள், நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர், கமநலசேவைகள் பிரதி முகாமையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த விசேட கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

வனவளத் திணைக்களத்தின் பிடியிலிருக்கும் காணிகளை மூன்று முக்கிய தேவைகளுக்காக விடுவிப்பது தொடர்பாக வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்னாயகாவுடன் அண்மையில் பேச்சு நடத்தினேன். அதனடிப்படையில் இந்தத் தேவைகளுக்காக காணிகளை விடுவிப்பது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அவர் சம்மதம் தெரிவித்திருக்கின்றார்.

முதலாவதாக, 10 வருடங்களுக்கு மேலாக விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வனவளத் திணைக்களத்தினால் கல் நாட்டப்பட்ட காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்காக விடுவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கின்றது.

இதற்கு மேலதிகமாக, கால்நடைகளுக்காக மேய்ச்சல் தரவையாக தேவைப்படும் காணிகளை விடுவிப்பதற்கும் அமைச்சர் ரத்நாயக்க இணக்கம் தெரிவித்திருக்கின்றார்.

இவை தவிரவும், நீர்வேளாண்மை நடவடிக்கைகளுக்காக 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை வடக்கு மாகாணத்தில் விடுவிப்பதற்கும் சம்மதம் பெறப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் 25 ஆயிரத்துக்கும் அதிமானவர்களுக்குப் புதிதாக வேலைவாய்ப்பு வழங்க முடிவதுடன், அதனால் 50 – 100 பில்லியன் ரூபா வெளிநாட்டுச் செலாவணியை இலங்கை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் – என்றார்.

---

## இலங்கையில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, நாட்டில் நேற்று 1,517 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 71 பேர் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து தனிமைப்படுத்தலுக்குள்ளாகி வந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 82 ஆயிரத்து 60 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 54 ஆயிரத்து 871 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 23 ஆயிரத்து 487 பேர் சிகிச்சை பெறுகின்றனர்.

## வல்வெட்டித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நான்கு நாள்களில் 95 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் படும் எழுமாற்று பரிசோதையில் அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் நிலையில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவையே முடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

---

## வட்டுக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதுசெய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வட்டுக்கோட்டை கொரோனா சிகிச்சை மையத்தில் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்தவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு வழங்கவென பியரின்களுடன் இருவர் சிகிச்சை நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்துள்ளனர்.

அவர்களை அங்கிருந்தவர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர். அவர்களைப் பொலிஸாரிடம் கையளித்த போதிலும் , அவர்களுக்குக் கொரோனாத் தொற்று இருக்கும் என அச்சம் காரணமாக பொலிஸார் அவர்களைக் கைதுசெய்வதற்கு ஆரம்பத்தில் பின்னடித்தனர். பின்னர் அவர்களைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

இதேவேளை, கடந்த வாரமும் இருவர் வெற்றிலைகளுடன் குறித்த சிகிச்சை நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்த போதும் அவர்களை மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைக்க முற்பட்ட போதிலும் அவர்களைப் பொலிஸார் கைது செய்யப் பின்னடித்தமையால் அவர்கள் அன்றைய தினம் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த இருவரும் அன்றைய தினம் வெற்றிலைகளுடன் கஞ்சா போதைப்பொருளைக் கொண்டு வந்திருக்கலாம் எனும் சந்தேகம் அங்கிருந்தவர்களுக்கு ஏற்பட்டிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பரு.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

றையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பருத்தித்துறை நகர் வர்த்தகத் தொகுதியில் 23 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 7 வர்த்தகர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறிப்பட்டுள்ளது.

அதனையடுத்து தொற்றாளர்களை அடையாளம் கண்டு கொரோனா இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பும் பணியில் சுகாதாரத் துறையினர் ஈடுபட்டபோது 6 வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

அவர்கள் 6 பேரும் பி.சி.ஆர். மாதிரிகளை வழங்கிய நிலையில் தமது சொந்த ஊரான புத்தளம் மற்றும் காத்தான்குடிக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களுடன் பணியாற்றியவர்களைச் சுயதனிமைப்படுத்தச் சென்றபோது அவர்களும் தலைமறைவாகியுள்ளதால் பொலிஸாரின் உதவியை சுகாதாரத்துறையினர் நாடியுள்ளனர்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றத்துக்கு குறைந்தது ஒரு ஆண்டு சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**ZOOM மூலம் IELTS வகுப்பு**

ஒய்வுபெற்ற ஆங்கில போதனாசிரியரின் zoom மூலமான IELTS (Academic/General) பரீட்சை வகுப்பு. தனிப்பட்ட கவனம். பயில விரும்புவோர் தொடர்பு கொள்க:-

**076- 5500036**

# பொலிஸ் நிலையம் மருதானையில் தீ!

கொழும்பு, மருதானை பொலிஸ் நிலையத்தில் பாரிய தீவிபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீயைக் கட்டுப்படுத்த 3 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என கொழும்பு தீயணைப்பு சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது.

மருதானை பொலிஸ் நிலையத்தின் மேல் மாடியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் தெரியவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# இலங்கை நபருக்கு இந்திய கடவுச் சீட்டு

இலங்கையைச் சேர்ந்தவருக்கு இந்திய கடவுச் சீட்டு வழங்கப்பட்டது தொடர்பாக, கடவுச்சீட்டு அதிகாரி உள்பட மூவர் மீது சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்துள்ளது.

தமிழக ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்தவருக்கு சட்டவிரோதமாக இந்திய கடவுச் சீட்டு வழங்கினார்கள் என கடவுச் சீட்டு அலுவலக கண்காணிப்பாளர் உட்பட மூவர் மீது மத்திய புலனாய்வுத்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது .

மதுரை மண்டல கடவுச் சீட்டு அலுவலகத்தில் முதுநிலை கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வரும் வீரபுத்திரன் என்பவர் பணம் பெற்றுக்கொண்டு சட்டவிரோதமாக கடவுச் சீட்டு வழங்கினார் என முறைப்பாடு எழுந்தது.

இதைத் தொடர்ந்து மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் இதுதொடர்பாக இரகசிய விசாரணை நடத்தி வந்தனர்.

இதில் வீரபுத்திரன், இலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கு இந்தியர் எனக் கூறி, சட்டவிரோதமாக கடவுச் சீட்டு வழங்கியதும், அதற்காக 45 ஆயிரம் ரூபா பெற்றுக் கொண்டமையும் தெரியவந்தது.

இதையடுத்து கண்காணிப்பாளர் வீரபுத்திரன், கடவுச் சீட்டு வாங்கியவர் உள்ளிட்ட மூவர் மீதும் மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# கொரோனா அச்சுறுத்தல் இன்னும் நீங்கவில்லை

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் இன்னும் நீங்கவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அந்த சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

டெல்டா வகை கொரோனாத் தொற்றுக்குள்ளான 19 பேர் நாட்டின் பல பாகங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே டெல்டா வகை வைரஸ் நாட்டில் தொடர்ந்தும் பரவலடைவதைத் தடுக்க வேண்டுமாயின் பயணக்கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

# முழு அரசுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா தீர்மானம்

## சஜித்திடம் ரணில் கோரிக்கை

'ஐக்கிய மக்கள் சக்தியால் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை முழு அரசுக்கும் எதிரான பிரேரணையாக மாற்றப்பட வேண்டும்.'

இவ்வாறு வலியுறுத்தினார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க. கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) நடைபெற்ற கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அரசில் தனி நபர் ஒருவருக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசில் உள்ள தரப்பினரை ஒற்றுமையடையச் செய்யும் வகையிலானதாகவே அமையும்.

எவ்வாறாயினும் தனி நபருக்கு எதிராக அன்றி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முழு அரசுக்கும் எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர வேண்டும்.



இதற்கமைய அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசுக்கு எதிரான பிரேரணையாக ஐக்கிய மக்கள் சக்தி மாற்றியமைக்க வேண்டும். – என்றார்.

# கிராமசேவகர் மீது வவுனியாவில் தாக்கு!

வவுனியா – மகாறம்பைக்குளம் பகுதியில், தாண்டிக்குளம் பிரிவு கிராமசேவகர் மீது ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

வவுனியா – தாண்டிக்குளம் ஏ–9 வீதியின் கரையில், அரசுக்கு சொந்தமான காணியில், சிலர் சுற்றுவேலி அமைத்து, வியாபார நிலையங்களையும் அமைத்திருந்தனர்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளிற்கமைய கடந்த 9 ஆம் திகதி, அப்பகுதிக்குச் சென்ற வவுனியா பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவினர், அனுமதியற்ற வியாபார நிலையங்களை அகற்றியிருந்தார்.

இந்நிலையில் குறித்த சம்பவத்தை சுட்டிக்காட்டி, தாண்டிக்குளம் பிரிவு கிராமசேவகர் மீது நபர் ஒருவர், கடந்த வியாழக்கிழமை தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிராம சேவகரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தாக்குதல் மேற்கொண்டவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# பள்ளிவாசல்களில் பின்பற்ற வேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் வெளியானது

பள்ளிவாசல்களில் பின்பற்றப்பட வேண்டிய புதிய சுகாதார வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவால் இந்த வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய, பள்ளிவாசல் தொழுகையின் போது சுகாதார விதிமுறைகளுக்கமைய ஒரே நேரத்தில் 100 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பள்ளிவாசலின் உட்புறம் மற்றும் வெளிப்புறத்தில் தேவையற்ற முறையில் ஒன்றுகூடுவதைத் தவிர்த்து செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பள்ளிவாசல்களுக்குள் பிரவேசிக்கும் போதும் பாதுகாப்பு முகக்கவசம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உணவுப்பொருள்களை கொண்டுவருவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேலும் கைலாகு செய்வதை தவிர்த்து செயற்படுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# 'இயக்கி' உணவு விற்பனை நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது



கிளிநொச்சியில் 'இயக்கி' உணவு விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் நிதிப் பங்களிப்பில், நலிவுற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் உருவாக்கப்பட்ட 'இயக்கி' உணவு விற்பனை நிலையம் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 'இயக்கி' உணவு விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்த உணவகத்தில் பாரம்பரிய உணவுகளை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கணவரின் கணிணி தரவுகளை சோதிக்கும் மனைவி தவிர்க்குமாறு உத்தரவிட்டது கல்கிஸ்ஸ நீதிமன்றம்!

கணவனின் கணிணியில் உள்ள தரவுகள், ஆவணங்கள், குறுந்தகவல்கள் அல்லது சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை பார்ப்பதைத் தவிர்க்குமாறு கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தான் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் தனது தனிப்பட்ட கணிணிக்குள் மனைவி சட்டவிரோதமாக நுழைந்துள்ளார் எனக் குற்றம் சுமத்தி கணவரால் கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வழக்கு விசாரணையின் பின்னர் நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியுள்ளது. தனது மனைவி கணினியில் இருந்த பல்வேறு தகவல்களை தரவிறக்கம் செய்து தனது கையடக்க தொலைபேசி உரையாடல்களை இரகசியமாக பதிவு செய்துகொண்டுள்ளார் எனக் கணவன் குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக மனைவி அறைக்குள் குரல் பதிவு உபகரணங்கள் உட்பட பொருத்தியுள்ளார் என அவர் கூறியுள்ளார். அறை மூடப்பட்டிருக்கும் போது அறைக்குள் நுழைவதும், செயலிழக்கச் செய்யப்பட்ட கணிணியை வலுக்கட்டாயமாக அணுகியமையும், தனியுரிமையை மீறிய செயலாகும்.

மனைவியின் இந்தச் செயலால் நியாயமான உரிமையும் நம்பிக்கையையும் மீறப்பட்டுள்ளதாக கணவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தன்னை பிரிந்து வாழும் தனது மனைவி, தனது தனியுரிமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமாகவும் எந்த அனுமதியுமின்றி தகவல்களை சேகரிக்க மனைவி தனது கணிணியை செயற்படுத்திய விடயம், கணிணி குற்றவியல் சட்டத்தின் 3 மற்றும் 4 பிரிவுகளின் கீழ் இது கடுமையான குற்றம் என்று கணவர் வாதிட்டுள்ளார்.

குறித்த முறைப்பாட்டை பதிவு செய்த கணவர் கொழும்பு பிரதேச அரச வைத்தியசாலையில் வைத்தியராக பணியாற்றுகின்றார். அவரது மனைவி வடமாகாண அரச வைத்தியசாலையில் விசேட வைத்தியராக பணியாற்றி வருகின்றார்.

இந்த நிலையில் கணவனின் கணிணியில் உள்ள தகவல்களைப் பார்ப்பதைத் தவிர்க்குமாறு கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சேதனப் பசளை உற்பத்தியிலுள்ள குறைபாடுகள் யாவும் தீர்க்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

சேதனப் பசளை உற்பத்தி செய்வதிலுள்ள குறைபாடுகள், விரைவில் தீர்க்கப்படுமென கடற்தொழில் நீரியல்வழங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்ட அவர், அங்கு ஊடகவியலாளர்களை சந்தித்தபோது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மக்கள் நலன் கருதியே இரசாயன பசளைக்குப் பதிலாக சேதனப் பசளைகளை உற்பத்தி செய்யும் திட்டத்தை அரசாங்கம் செயற்படுத்தியதாக அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் சேதனப் பசளைகளை உற்பத்தி செய்யும் திட்டத்தை எதிர்வரும் வருடத்தில் இருந்தே முழுமையாக அமுல்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செயற்றிட்டத்தை முன்னெடுப்பதில் உள்ள குறைபாடுகள் எல்லாம் விரைவில் தீர்க்கப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ஆண்டியின் வேலை...!

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பார்கள்.

அப்படி ஆகியிருக்கின்றது தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அரசியல் பழி தீர்ப்பதற்காக கொரோனாத் தடுப்பு முறைமை தொடர்பான தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திய கோட்டா அரசின் செயற்பாடு.

*'வீதியில் போன பாம்பைத் தூக்கி மடியில் விட்டு விட்டு, குடையுது, குடையுது என்று குதித்த கதை'* போல கடைசியில் ஆகியிருக்கின்றது கோட்டா அரசின் இந்தஇராணுவப் பாணி அணுகுமுறை.

கல்வித்துறையை இராணுவ மயப்படுத்தவும், உயர் கல்விப் பட்டமளிப்பை தனியார் வர்த்தகத்துக்கான துறையாக மாற்றவும் வசதியாக 'ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவை பாதுகாப்புக் கல்லூரியை' பல்கலைக்கழகம் போல மாற்றும் சட்டமூலத்தை சத்தம் சந்தடியின்றி கொண்டு வர முயல்கின்றது கோட்டா அரசு.

அந்த அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் – மொட்டுக் கட்சிக் கூட்டணியின் எம்.பிக்கள் சகலரும் – நாட்டின் ஆட்சிமுறைமையை இராணுவ மயப்படுத்தும் போக்கில் இந்த அரசு செயற்படுகின்றது என்று தெரிந்து கொண்டே, தங்கள் பதவிகளையும் பவிசுகளையும் தக்க வைப்பதற்காகத் தொடர்ந்தும் இந்தக் கெடு நடவடிக்கைக்குத் துணை போய்க் கொண்டு இருக்கின்றார்கள் என்பதும் தெரிந்ததே.

கல்வித்துறையை இராணுவ மயப்படுத்தவும் –

உயர்கல்வித்துறையை தனியார் வர்த்தகமயப்படுத்தும் திட் டத்தை நடைமுறைப்படுத்தவுமே, கொத்தலாவலை பல்கலைக்கழக சட்ட மூலத்தை அரசு கொண்டு வருகின்றது என்பது வெளிப்படையான உண்மை.

தன்னிடமுள்ள நாடாளுமன்றப் பெரும்பான்மையை வசமாகப் பயன்படுத்தி, அரசு இந்த அராஜகத்தை அரங்கேற்ற முனைகின்றது.

அந்த நடவடிக்கைக்கு எதிராகத் தமது ஜனநாயக ரீதியான எதிர்ப்பை வெளிப்படுத்த முயன்ற ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை மௌனிக்கச் செய்து, மக்களின் ஜனநாயக ரீதியான எதிர்ப்பை அடக்குவதற்கு கொவிட் தொற்றுத் தடுப்புத் தொடர்பான விதிமுறையைத் தவறாகப் பயன்படுத்தியது கோட்டாவின் கெடுபிடி அரசு.

இப்போது அது பகிரங்கமாக அம்பலமாகி, தொற்றுத் தடுப்புத் தொடர்பான விதிகளை, கோட்டாவின் இராணுவப் போக்கு அரசு, ஜனநாயகக் குரல்களை அடக்கத் தவறாகப் பயன்படுத்துகின்றது என்ற உண்மை எல்லோருக்கும் அப்பட்டமாகப் புரியும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கோட்டா அரசின் அந்த நடவடிக்கைக்கு எதிராக இலங்கையின் பல பாகங்களிலும் மக்கள் கொதித்தெழுந்து போராடும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற வேறுபாடின்றி, மக்கள் கிளர்ந்தெழும் நிலைமை நேர்ந்துள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்திலும் கூட அத்தகைய போராட்டம் ஒன்று நடைபெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கப்பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்டாலினும் ஏனைய ஒரு சில டசின் பேரும், சமூக இடைவெளியைப் பேணி, ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியபோது, அது ஜனநாயக ரீதியிலான எதிர்ப்பு என்பதை ஏற்று, அரசு சகித்துப் போயிருக்க வேண்டும்.

ஆனால் இராணுவப் போக்குத் திமிர்த்தனத்தில் இருக்கும் கோட்டாவின் கெடுபிடி அரசு சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த வேலையைச் செய்திருக்கின்றது.

அவர்களைக் கைது செய்ததும், அத்துடன் அவர்களை விடுவித்து அடங்கியிருக்கலாம். அவர்களை நீதிமன்றத்திலும் முன்னிலைப்படுத்தியது. நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது. சட்டப்படியான அந்த அனுமதியில் அவர்களை வெளியே செல்லவிட்டிருக்கலாம்.

ஆனால் கோட்டா அரசின் திமிர்த்தனம் தனது கைவரிசையைக் காட்டத்தூண்டியது. பிணையில் விடுவிக்கப்பட்டவர்களை சட்ட விரோதமான முறையில் அள்ளிச் சென்று, சுகாதார விதிமுறைகளைத் தவறாகப் பயன்படுத்தி, தனிமையில் அடைத்துத் தனது கையாலாகாத்தனத்தைக் காட்டியது.

அதன் மூலம், ஒரே நாளில் அரச எதிர்ப்பாளரான ஜோஸப் ஸ்டாலினின் மக்கள் செல்வாக்கை உயர வைத்திருக்கின்றது கோட்டா அரசின் முட்டாள்தனம்.

தொற்றுத் தடுப்பு விதிகளை அரசு தனது அரசியல் பழிவாங்கல்களுக்குத் தவறாகப் பயன்படுத்துகின்றது என்ற உண்மை மக்களை எட்ட அது வழி செய்திருக்கின்றது.

அரசின் இத்தகைய எதேச்சாதிகாரப் போக்குகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழக் கூடிய சூழல் உண்டு, மக்கள் ஒன்று கூடி திரண்டெழலாம் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் உருவாக அது வழி செய்திருக்கின்றது.

மொத்தத்தில் தொழிற்சங்கப் பிரநிதிகளை பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு அனுப்பித் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டிருக்கின்றது அரசு. அவ்வளவுதான்.

## கல்விச் சீர்திருத்தத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர் அரசியல் நோக்கங்களை ஆதரிக்கக் கூடாது

### ஜனாதிபதி கோட்டா 'அட்வைஸ்'



கல்வி சீர்திருத்தங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள் தற்காலத்துக்குப் பொருத்தமான ஒரு கல்வி முறையை முன்வைக்க வேண்டுமே அன்றி, அரசியல் நோக்கங்களை ஆதரிக்கக் கூடாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெருநகரப் பல்கலைக்கழக திட்டத்துக்கான உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் பெரும்பாலானோர், அரச தொழிலை எதிர்பார்க்கின்றனர் எனவும் தொழில் வழங்குவதை விட, தொழிலை உருவாக்கும் பொருளாதாரப் பின்புலத்தைக்கட்டியெழுப்பும்செயற்பாட்டையே அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்துக்கு நேரடியாகத் தொடர்புபடும் அல்லது சுயதொழிலில் ஈடுபடக்கூடிய அறிவுள்ள நபரை பட்டப்படிப்பின் பின் உருவாக்குவதே தமது எதிர்பார்ப்பு எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

100 வீதம் அரச பல்கலைக்கழகங்களை நடத்த முடியாது எனக் கூறியுள்ள ஜனாதிபதி, வர்த்தக நோக்குடன் மாத்திரம் செயற்படுத்தப்படும் பல்கலைக்கழகங்களுக்கு தாம் எதிர்ப்பை வெளியிடுகிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

தனியார் பல்கலைக்கழகங்களில் ஈட்டும் வருமானத்தை கல்வி நடவடிக்கைகளின் மேம்பாட்டுக்காக ஒதுக்க வேண்டும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதேவேளை, பெருநகர பல்கலைக்கழகத்துக்கான முதலாவது திட்டத்தை கேகாலை – பின்னவல பகுதியில் எதிர்வரும் வாரங்களில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மருந்து வகைகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு!

### ராஜித காட்டம்



நாட்டில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்–

'அண்மைக்காலத்தில் நாட்டின் தனியார்துறை சந்தைகளில்கூட தைரொட்சின், புற்றுநோய் மருந்து உள்ளிட்ட அத்தியாவசியமான மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதுபோன்றதொரு நெருக்கடி நிலை முன்னெப்போதும் ஏற்பட்டதில்லை.

அதுமாத்திரமன்றி நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதில்லை. அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் உடனடியாக அதற்குரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் புதியதொரு மென்பொருளின் உதவியுடன் மருந்துப்பொருள்களின் கையிருப்பு தொடர்பான தகவல்கள் உரியவாறு பேணப்பட்டன' – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## 21 சிறுவர்கள் உட்பட 22 பேருக்கு களுதாவளையில் கொரோனா உறுதி

மட்டக்களப்பு –களுதாவளை பகுதியிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றில், 21சிறுவர்கள் உட்பட 22 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து குறித்த சிறுவர் இல்லமும் மூடப்பட்டுள்ளதாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.


குறித்த இல்லத்திலுள்ள மாணவர்கள் சிலருக்கு காய்ச்சல் ஏற்பட்டமையால், அவர்கள் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளனர்.

இதன்போது அந்த மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில், கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஏனைய சிறுவர்களுக்கும், அங்கு கடமையாற்றுபவர்களுக்கும் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டபோது, 19 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில், மேலும் மூவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த சிறுவர் இல்லத்தில், 21 சிறுவர்களும் ஒரு விடுதி காப்பாளருமாக 22 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் ஏனையவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நோய் நிலை கண்காணிப்பு இயந்திரம் கையளிப்பு



முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு, சுமார் 21 லட்சம் ரூபா பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு மற்றும் கிருமி நீக்கும் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு குறித்த இயந்திரங்கள் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக, 21லட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு இயந்திரம் மற்றும் கிருமி நீக்கும் இயந்திரங்கள் ஆகியன முல்லைத்தீவு சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி மு.உமாசங்கரிடம் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ கையளித்தார்.

குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் ஜேசு ரெஜினோல்ட் , மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட உதவி பிரதேச செயலாளர் திருமதி எல்.கேகிதா, வைத்திய அதிகாரிகளான வைத்தியர் சோபன், வைத்தியர் விதுரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 16

காான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில் குட்டிமணிக்கும், ஜெகனுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் இருந்து வெளியேறும் சமயம், என்னை நோக்கி வந்த குட்டிமணி சேர்த்து விலங்கிடப்பட்ட தமது இரண்டு கைகளினாலும் எனது இரண்டு கைகளையும் பற்றி 'பிரிவோம்; சந்திப்போம்' என்று விடை கூறிய சமயம் எங்கள் இரண்டு பேரினதும் கண்கள் பனித்தன என்று எழுதியிருந்தேன் அல்லவா?

அச்சமயம், எங்களுக்கு அருகில் ஒரு வயோதிப மாது வாய் விட்டுக் கதறி அழுது கொண்டிருந்தார். பலரும் அவரைக் குட்டிமணியின் தாயார் என்று நினைத்தனர். 'என்ர மகனே...!' என்று குட்டிமணியை அவர் கூவியழைத்தமையைப் பார்த்த சிங்களப் பத்திரிகை – 'திவயின' மற்றும் 'த ஐலண்ட்' என்று நினைக்கிறேன் – அந்தப் படத்தைப் பிரசுரித்து நீதிமன்றத்தில் கதறி அழும் குட்டிமணியின் தாய் என அடிக் குறிப்பும் இட்டு செய்தி பிரசுரித்திருந்தது.

ஆனால், குட்டிமணிக்கு எப்போதும் தன் வீட்டில் உணவளித்து, உபசரித்து, பிள்ளை போல பார்த்துக் கொண்ட சிற்றன்னை முறையான மாது அவர். சட்டத்தரணி கனக மனோகரனின் தாயார். மகன் கனக மனோகரனுடன் தான் உணவூட்டி, உயிரூட்டி வளர்த்த குட்டிமணியைப் பார்க்க தீர்ப்பு சமயம் நீதிமன்றுக்கு வந்திருந்தார்.

அவர் போன்றோர் மட்டுமல்லர். நீதிமன்றுக்குள் சட்டத்தரணிகள் எம்.சிவசிதம்பரம் எம்.பி., நவரத்தினம் (கரிகாலன்) எல்லோரும் விக்கி, விக்கி அழுதார்கள்.

எம். சிவசிதம்பரம் பருத்த சரீரம் கொண்டவர். நிமிர்ந்து நின்றால் மலை போல கம்பீரமாக நிற்பார். அவர் குரல் நீதிமன்றத்தில் சிம்ம கர்ஜனை போல, மன்றம் அதிரும். அத்தகையவர் நீதிமன்றத்தில் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தவர், ஒரு கணத்தில் திடீரென உடைந்து, நாத் தழுதழுத்து, விக்கி அழுதபடி சடாரென கதிரையில் சரிந்தார். அத்தகைய சோக நிலைமை மன்றுக்குள் அரங்கேறியது.

அவை பற்றிய என் நினைவுகளைப் பதிவு செய்ய முன்னர், 39 வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்தத் துன்பியல் நிகழ்வு குறித்து ஓரிரு ஆண்டுகள் கழித்து சட்டத்தரணி நவரத்தினம் (கரிகாலன்) பதிவு செய்த விடயங்களை இங்கே குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

## கரிகாலனின் குறிப்பு

*அமர்க்களப்பட்ட நீதிமன்றத்தில் திடீரென அமைதி நிலவியமை நீதிபதி வருகிறார் என்பதற்கு அறிகுறி. ஆசனத்தில் அமர்ந்தவர், ஒரு கனைப்புடன் நிசப்தத்தைக் குலைத்துவிட்டு நீண்ட தீர்ப்பினை நிறுத்தி, நிறுத்தி வாசித்தார். தீர்ப்பின் சாரம் மிகக் காரமானது. கொலைக் குற்றச்சாட்டின் மீது குட்டிமணி, ஜெகன் இருவரையும் தாம் குற்றவாளிகளாகக் காண்பதாகக் கூறினார் (I find them guilty of the charge of murder").*

*அடுத்து என்ன தண்டனை வழங்குவது என்று அரசு தரப்பு வழக்கறிஞர் மாறப்பனவிடம் நீதிபதி கேட்டார். அது வழக்கமான கேள்வியல்ல. வாழ்வுக்கும் சாவுக்குமிடையே தடுமாற வைக்கின்றதான வழக்கத்துக்கு மாறான ஒரு குழப்பம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவில் இருந்ததை நீதிபதியும் அறிந்திருக்கிறார். இதனால் என்ன செய்யலாம் என்று தலையைச் சொறிந்திருக்கிறார்.*

*மரண தண்டனை விதிக்கும்படி மாறப்பன கேட்டுக் கொண்டார். வீரர்களின் வழக்கறிஞர்களான நாங்கள் வெகுண்டெழுந்தோம். வழக்கமாக சீனியர் வழக்கறிஞரை அனுசரித்துப் பேசுவதுதான் ஜூனியரின் பண்பு. எனினும், எனது கொதிப்பையும் பதைப்பையும் புரிந்து கொண்ட திரு. சிவசிதம்பரம் என்னைக் கட்டுப்படுத்த முயலவில்லை.*

*சம்பந்தப்பட்ட சட்டம் நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்ட வேளையில் 'இச்சட்டத்தில் மரண தண்டனைக்கு இடமில்லை' என்று மார்பு தட்டிய மந்திரி அத்துலத் முதலியின் உரையை விவாதக் குறிப்பேட்டிலிருந்து வாசித்துக் காட்டினேன். அந்த விவாதத்தில் "மரண தண்டனைக்குச் சட்டத்தில் இடமளிக்காத எங்களை எப்படி ஹிட்லரோடு ஒப்பிடுவீர்கள்?" என்று அமைச்சர் அப்போது எதிர்க்கட்சிகளைக் கேட்டிருந்தார். "ஹிட்லர் யூதர்களைக் கொலை செய்வதாக வெளிப்படையாகக் கூறிவிட்டுத்தான் கொன்றொழித்தான். நீங்களோ மரண தண்டனை விதிக்கமாட்டோம் என்று வாக்குறுதி தந்துவிட்டு இன்று இந்த வீரர்களைக் கொலைக் களத்துக்கும் அனுப்பும்படி கோரிக்கை விடுக்கிறீர்களே. உங்களை விட ஹிட்லர் நேர்மையானவன் இல்லையா?" – என்று என் நெஞ்சத்துக் குமுறலையெல்லாம் நீதிபதியின் முன் கொட்டினேன்.*

*அன்றிருந்த ஆவேசத்தில், நீதிமன்ற மரபுகளையெல்லாம் என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அரசு தரப்பினருக்கும் எமக்குமிடையே நடந்த ஆக்ரோஷமான விவாதத்தினால் அமளிதுமளிப்பட்ட நீதி மன்றம் அன்று நாடாளுமன்றம் போல நடுத்தெருவுக்கு வந்துவிட்டது. செருப்புகள் பறக்கவில்லை என்றாலும் கூட நெருப்புப் பொறி பறந்தது.*



தமிழக முஸ்லிம் லீக் தலைவருடன் எஸ்.டி.எஸ்.ஐயா.

*"இந்த விடுதலை வீரர்களைக் கொலைக்களம் அனுப்புவீர்களென்றால் அந்தப் பழியைத் துடைப்பதற்கு இந் நாட்டின் இளந்தமிழ்த் தலைமுறையினர், நூறாண்டுகளுக்குப் போரிடுவார்கள்." என்று கூறினேன். எந்த விளைவுகளையும் எதிர்கொள்வதற்கு வழக்கறிஞர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து நீதிபதி அவர்களும் சாதுரியமாகவே பதிலளித்தார். நான் என்ன பண்ணட்டும்? ("I can't help it") என்றார்.*

*இந்த வேளையில் குட்டிமணியும் ஜெகனும் என்னிடம் தாம் எந்தத் தண்டனையையும் ஏற்கத் தயாரென்றும் தம் உயிருக்காக யாரையும் யாசிக்க வேண்டாமெனவும் வேண்டிக் கொண்டனர். அதனைக் காதில் போட்டுக் கொள்ளாது எமது கடமையில் கருத்தாயிருந்தோம். ஆயினும் என்ன...? காலதேவன் கட்டளையிட்டான். நீதிதேவன் நிறைவேற்றினான்.*

*மரபு தவறாமல் மரணதண்டனை விதிப்பதற்கான அமங்கலமான சூழ்நிலை சிருஷ்டிக்கப்பட்டது. மின் விசிறிகள் நிறுத்தப்பட்டன. விளக்குகள் அணைக்கப்பட்டன. நீதிமன்றச் சுவரிலே 'டிக் டிக்'கென்று நகர்ந்து கொண்டிருந்த கடிகாரத்தின் முட்கள் 'டக்' என்று ஸ்தம்பித்தன. நீதிபதி கறுப்பு நிற அங்கியைப் புனைந்து கொண்டபோதே சிவப்பு நிறச் செய்தியொன்று எம் நெஞ்சைத் தீய்த்தது. இரு வீரர்களும் "ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்படும் ஒரு தேதியில் கண்டி போகம்பரைச் சிறைச்சாலையின் நான்கு சுவர்களுக்குள் மரணமடையும் வரையில் தூக்கிலிடப்படுவார்கள்" என்று நீதிபதி தண்டனை விதித்தார்.*

*'தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்' என்றுதான் பாரதி கூறினான், பாஞ்சாலி சபதத்தில் 'நீதி கவ்வும்' என்று கூறவில்லை. பார்வையாளர் பகுதியிலிருந்த தமிழ்த் தம்பிகள் பேயறைந்தவர்களைப் போல ஆனார்கள். எம்மில் சிலருக்கு இரத்தமே உறைந்துவிட்டது போன்ற உணர்வு. பாறை போல எப்போதும் இறுக்கமாக இருக்கும் சில இராணுவ அதிகாரிகளின் முகத்தில் சந்தோச சலனங்கள் தெரிந்தன. வேறு சிலர் நாசூக்காக நடுநிலைமை வகித்தார்கள். குற்றவாளிக் கூண்டைத் திரும்பிப் பார்த்தேன், 'மெய்த் திருப்பதம்மே வென்ற போதிலும், இத்திருத்துறந்து) ஏகென்ற போதிலும், சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை' ஒத்திருந்த இராகவனை மட்டுமல்ல, இலக்குவனையும் கண்டேன். என் உள்ளம் ஓசைப்படாமலே ஓலமிட்டு அழுதது.*

*தண்டனை குறித்துக் குட்டிமணி ஏதும் கூற விரும்புகிறாரா என்று மரபு நெறி தவறாமல் நீதிபதி கேட்ட நேரத்திலே தான், தமிழ் ஈழப் போராளிகளின் வீர வரலாற்றிலே இன்று சிரஞ்சீவித்துவம் பெற்றுவிட்ட சேதியொன்றைக் குட்டிமணி கூறினார்.*

*"நான் தூக்கிலிடப்பட்ட பின் என் விழிகளைக் கண்ணிழந்த ஒரு தமிழ் இளைஞனுக்கு வழங்குங்கள். இந்தக் கண்களின் மூலமாக மலரப் போகும் தங்கத் தமிழ் ஈழத்தைத் தரிசிக்க ஆசைப்படுகிறேன்" என்றார். வச்சிரத்திலே வார்த்தெடுத்த இந்த வார்த்தைகள் ஈழத்து மண்ணிலே விடுதலை வெறியுடன் களமாடப் புறப் பட்ட இளைய தமிழ்த் தலைமுறையினரின் இரத்த நாளங்களிலே புகுந்து, குருதியுடன் கலந்து சூடேற்றியிருக்கின்றன.*

*'சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதனை நான் அனுபவிக்கத் துடித்தேன். அதற்காக என்னைத் தூக்கிலே போடுகிறீர்களே, மலரப் போகும் என் தாயகத்தை – தமிழ் ஈழத்தை – நீங்கள் தூக்கிலே போட முடியாது' – என்று குமுறினார் ஜெகன்.*

*மறவர்கள் இருவரினதும் தமிழ் உரைகளை நீதி மன்றத்தில் ஆங்கிலத்திலே மொழிபெயர்த்துக் கூறிக் கொண்டிருந்த நான், ஒரு கட்டத்தில் உணர்ச்சி மேலீட்டால் மேலும் பேச முடியாமல் அழுது விட்டேன். தொடர்ந்து திரு. சிவசிதம்பரம் மொழிபெயர்த்தார்.*

*அன்று நீதிமன்றத்திலிருந்து வீரர்கள் இருவரும் எம்மிடம் விடைபெற்ற போது அன்பு சகோதரர்கள் இருவரையும் ஆரத் தழுவி முத்தமிட்டேன். வழக்கறிஞர்கள் குற்றவாளிகளை முத்தமிடும் காட்சி நீதிமன்ற வரலாறு காணாத புதுமை. பார்வையாளர்களுக்கு இது அபூர்வமான அனுபவம். எமது நெருக்கமான உணர்வுகளையும், உறவுகளையும் ஏற்கெனவே நன்றாகத் தெரிந்து வைத்திருந்த சி.ஐ.டி. அதிகாரிகளுக்கும், சிப்பாய்களுக்கும் அவை சீரணிக்க முடியாத நெருடல்கள்.*

*நீதிமன்றத்திலிருந்து அனைவரும் கலைந்த பின்னர் தன்னந்தனியே ஆழ்ந்த யோசனையுடன் அமர்ந்திருந்த எனது சீனியரிடம், "புறப்படுவோமா? என்று கேட்டேன். எதுவும் பேசாமல் எழுந்து பின்தொடர்ந்த சிவசிதம்பரம் அவர்களைத் திரும்பிப் பார்த்தேன். கண்கள் குளமாகிக் கிடந்தன. மரணத்தின் வாயிலிருந்து தமிழ் மறவர்களை மீட்டுவிடலாமென்று நாலரை மாதங்களாக இரவு பகலாக ஓயாது உழைத்தோம். சிவசிதம்பரம் பெரிதும் கலங்கிப் போனார்.*

–இப்படி கரிகாலன் குறிப்பிடுகின்றார்.

குட்டிமணி, ஜெகன் தொடர்பான இந்த வழக்கும், அதன் தீர்ப்பும், அதை எமது 'தினபதி' பத்திரிகை செய்தியாக்கிய விடயமும் என் மனதில் ஆழமான சில தாக்கங்களை ஏற்படுத்தின.

ஒரு சட்டத்தில் விசாரித்து, இன்னொரு சட்டத்தில் தண்டனை கொடுக்கும் இலங்கையின் சட்ட முறைமை குறித்து சட்ட மாணவனான எனக்கு மனதில் முழு அவநம்பிக்கை தோன்றியது அப்போதுதான்.

அந்தக் குற்றத் தீர்ப்பை பிரசுரிப்பதில் கூட நெருக்கடிகள் இருந்தன. 'தினபதி', 'சிந்தாமணி' க்கு ஆசிரியராக எனது குரு – பத்திரிகைத்துறை ஜாம்பவான் – எஸ்.டி.சிவநாயகம் இருந்தபோதிலும் சிங்களக் கம்பனி ஒன்றின் பத்திரிகையில் அதை முழுமையாகப் பிரசுரிப்பது என்பது, எரிபொருள் பவுஸருக்கு ஊடாக நெருப்பைக் கொண்டு செல்லும் பகீரதப் பிரயத்தன வேலை என்பது அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

நான் கலங்கி நின்றேன். குருஷேத்திரத்தில் அருச்சுனன் போல. அப்போதுதான் பார்த்தனுக்குக் கீதா உபதேசம் செய்த பரந்தாமன் போன்று எனக்கு சில விடயங்களை எடுத்துரைத்தார் சிவநாயகம் ஐயா.

எதிர்காலத்தில் – சுமார் இருபத்தியைந்து ஆண்டுகள் – பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் வளைந்தும், நெளிந்தும், நிமிர்ந்தும், ஸ்திரப்பட்டும் நின்று, ஒரு பத்திரிகையை வழிப்படுத்துவதற்கான அத்திபாரத்தை அப்போது சிவநாயகம் ஐயா எனக்குள் ஆழமாக விதைக்கின்றார் என்று தெரியாமலேயே – புரியாமலேயே – நான் அக்கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டேன்.

1983 ஜூலைக் கலவரத்தை அடுத்து கொழும்புக்கு நிரந்தரமாக விடை கொடுக்கவும், சட்டக் கல்லூரியில் மிச்சமாக இருந்த இறுதிப் பரீட்சைக்கும், தினபதிக்கும் கும்பிட்டு போட்டு விட்டு நான் யாழ்ப்பாணத்துக்கு மூடை, மூடிச்சுகளைக் கட்டவும் அந்நிலைமை காரணமாக அமைந்தது.

நான் தினபதியை விட்டு விலகுவது துணை ஆசிரியர் இரத்தினசிங்கத்துக்குப் பிடிக்கவில்லையானாலும் சிவநாயம் ஐயா என்னை ஆசீர்வதித்து அனுப்பினார். அது மட்டுமல்ல, சில மாதங்கள் கழித்து உதயன் பத்திரிகைக்கு ஆரம்ப விதைப்புத் தொடங்கிய போது அதற்கான மூத்த பணியாளர்களைத் தேடித் தந்து அவரே அதற்கு வழிகாட்டியுமானார்.

உதயனின் முதல் செய்தியாசிரியர் என்.பத்மசீலன். உதயனுக்கான பணி நியமனக் கடிதத்தை அப்போது 'தினபதி' செய்தியாசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த பத்மசீலனுக்கு 'தினபதி' ஆசிரிய பீடத்தில் தமது அறையில் வைத்து உதயன் சார்பில் தாமே கையளித்தார் சிவநாயகம் ஐயா.

பத்மசீலனையும் ஆசீர்வதித்து, ஆலோசனைகள் கூறி உதயனுக்கு அனுப்பி வைத்தார்.

சிவநேசன் கொலை வழக்குத் தீர்ப்பின் போது நீதிமன்றத்தில் நடந்தவை தொடர்பில் என் அவதானங்கள், அது பற்றிய செய்தி பிரசுரம் தொடர்பில் எனக்கு ஏற்பட்ட அதிருப்தி, சிவநாயகம் ஐயா அதையொட்டி வழங்கிய விளக்கம், ஆலோசனைகள் போன்ற விவரங்களை நாளை கூறுகிறேன்.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு - 12

### அட்சரகணிதக் கோவைகள்

**(01) கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை பூர்த்தி செய்க.**

| | கோவை | கோவையிலுள்ள தெரியாத கணியம் | தெரியாக் கணியத்தின் குணகம் | கோவையிலுள்ள உறுப்புக்கள் | உறுப்புக்களுடன் தொடர்புபட்ட கணிதச் செய்கைகள் |
|---|---|---|---|---|---|
| | 3a + 5 | a | 3 | 3a + 5 | X, + |
| | 2x | x | 2 | 2x | X |
| 1. | 2b - 3 | ------------ | ------------ | ------------ | ------------ |
| 2. | 11z | ------------ | ------------ | ------------ | ------------ |
| 3. | 20 - 9m | ------------ | ------------ | ------------ | ------------ |
| 4. | P - 10 | ------------ | ------------ | ------------ | ------------ |
| 5. | a + 2 | ------------ | ------------ | ------------ | ------------ |

**(02) அட்சர கணித கோவைகளை உருவாக்குக.**

01. ஓர் எண்ணின் பெறுமானம் **a** இனால் குறிக்கப்பட்டுள்ளன. அவ் எண்ணின் அரை மடங்கிலும் 4 கூடிய எண் யாது?
02. **m** எனும் எண்ணின் இரு மடங்கிலும் 15 கூடிய எண்ணைக் காண்க?
03. ஒரு அப்பிளின் விலை **a** எனின் அவ்வாறான 5 அப்பின் விலை யாது?

**(03) அட்சரகணித உறுப்புகளைச் சுருக்குதல்**

1. 25P + 15q + 11q + 2P
   = 25P + 2P + 15q + 11q
   = 27P + 26q
2. 4x + 5y + 3x + 7
3. 3x + 2y + 2x + 7
4. 3a + 4 + 6b + 3
5. 3x + 6k + 5x + 3k + 9
6. 5P + 4q + 2p + q

**(04) a = 9 எனின் பின்வரும் கோவைகளின் பெறுமானம் காண்க?**

1. 3a - 5
   = 3 x 9 - 5
   = 27 - 5
   = 22

2. 5 ( a - 2)
3. 25 - 2a
4. a + 4
5. 3a - 3

ஆக்கம் - லாவண்யா
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 10 | விஞ்ஞானம் | அலகு 07

### மூலகங்களினதும் சேர்வைகளினதும் அளவறிதல் விடைகள்

**01. a)**

i) மூலக அணுவொன்றின் திணிவு $^{12}_{6}C$ சமதானி அணுவொன்றின் திணிவின் 1/12 பங்கைப் போன்று எத்தனை மடங்கு என்பதே மூலக அணு ஒன்றின் சாரணுத் திணிவு எனப்படும்.

ii) ஈலியம் அணுவானது $^{12}_{6}C$ சமதானி அணுவின் திணிவின் 1/12 பங்கைப் போன்று 4 மடங்கு ஆகும்.

iii) 7

iv) ஒட்சிசனின் சாரணுத் திணிவு

$$= \frac{\text{O மூலக அணுவொன்றின் திணிவு}}{1/12 \times {}^{12}_{6}C \text{ அணு ஒன்றின் திணிவு}}$$

$$= \frac{2.66 \times 10^{-23}\ g}{1/12 \times 1.99 \times 10^{-23} g}$$

= 16.02

**b)**

i) மூலகம் / சேர்வை மூலக் கூறு ஒன்றின் திணிவு C - 12 சமதானி அணுவின் திணிவின் 1/12 இன் எத்தனை மடங்கு எனக் குறிப்பிடப்படும் எண்பெறுமானம் அக்குறித்த மூலகத்தின் அல்லது சேர்வையின் சார்மூலக்கூற்றுத் திணிவு எனப்படும்.

ii) $$\text{சார் மூலக்கூற்றுத் திணிவு} = \frac{\text{மூலகம் அல்லது சேர்வை மூலக்கூறின் திணிவு}}{1/12 \times {}^{12}_{6}C \text{ அணுவின் திணிவு}}$$

iii)

1) $C_6H_{12}O_6$ (குளுக்கோஸ்) = ( 6 x 12) + ( 1 x 12) + (6 x 16)
= 180

2) $H_2SO_4$ (சல்பூரிக் அமிலம்) = (2 x 1) + 32 + (4 x 16)
= 98

3) $H_2O$ (நீர்) = 2 + 16 = 18

4) (காபனீரொட்சைட்) $CO_2$ = 12 + 32 = 44

சாரணுத் திணிவு - C - 12, S - 32, 4 - 1, O - 16

**C)**

i) வெவ்வேறு மூலகங்களை அவற்றின் சாரணுத் திணிவுகளுக்கு ஏற்ப அளந்து எடுத்து அவற்றின் அணுக்களை எண்ணிப்பார்க்கும்போது சமனாக அமையும். இப்பெறுமானம் மாறிலியாகும். இம் மாறிலி அவகாதரோ மாறிலி எனப்படும்.

ii) யாதேனும் ஒரு பதார்த்தத்தின் ஒரு மூலின் அளவு மூலர் திணிவு எனப்படும்

iii) 6g $H_2$ வாயுவின் மூல் (n) $= \frac{w}{m} = \frac{\text{திணிவு}}{\text{மூலர்திணிவு}}$

3mol வாயுவில் காணப்படும் மூலக்கூறுகளின் எண்ணிக்கை $= 6.022 \times 10^{23} \times 3$
$= 18.066 \times 10^{23}$ மூலக்கூறுகள்
$= 1.8066 \times 10^{24}$ மூலக்கூறுகள்

iv) 12g Mg பதார்த்தத்தின் மூல் (n) $= \frac{w}{m}$

$= \frac{12g}{24g\ mol^{-1}}$

= 0.5 mol

0.5 mol வாயுவில் காணப்படும் மூலக்கூறுகளின் எண்ணிக்கை $= 6.022 \times 10^{23} \times 0.5$
$= 3.001 \times 10^{23}$ மூலக்கூறுகள்

**d)**

i) மூல் $= \frac{\text{திணிவு}}{\text{முலர்திணிவு}} = \frac{w}{M}$

$= \frac{10g}{24gmol^{-1}} = 0.416\ mol$

ii) $n = \frac{w}{M}$ m = nxM $= 18gmol^{-1} \times 5mol = 90g$

iii) $M = \frac{m}{m} = \frac{440g}{10mol} = 44gmol^{-1}$

iv)
1. $C_8H_{18}$ = 96 + 18 = 114
2. $CCl_4$ = 140 + 12 = 152
3. $CS_2$ - = 12 + 64 = 76
4. $CH_3COOH$ - =12+3+12+32+1 =60

ஆக்கம் - வி.டினோஜன்

# நாட்டின் வளங்களை தனிப்பட்ட சொத்தாக தற்போதைய அரசு விற்பனை செய்கின்றது

## சுனில் ஹந்துனெத்தி ஆவேசப் பேச்சு



தனிப்பட்ட சொத்தாகக் கருதி எமது நாட்டின் வளங்களை தற்போதைய அரசாங்கம் விற்பனை செய்கின்றது. இதுவா அரசாங்கத்தின் கொள்கை என மக்கள் விடுதலை முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அந்த கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

“ஜனாதிபதி, பிரதமர் மற்றும் புதிய நிதியமைச்சர் ஆகியோர், தமக்குப் பணத்தை தேடும் வழி தெரியும் என கூறினாலும் அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பணத்தை தேடும் வழியே தெரியுமென்பதை நாங்கள் நன்கு அறிவோம். சொந்தக் கணக்குகளில் வைப்பிலிடுவதில் அவர்களுக்கு நிகர், அவர்களே. நாட்டுக்கான நிதியை அவர்களுக்குத் திரட்ட தெரியாது.

நாட்டுக்காகநிதியைதிரட்டும்முறைமை, நாட்டின் கடனை செலுத்த பணம் தேடும் முறைமை தொடர்பில் அவர்களுக்கு தெளிவு உள்ளதா என்பது தொடர்பான கேள்வி இப்போதும் எழுகிறது.

நாட்டின் நெருக்கடிக்கு பிரதான காரணம் கொரோனா என தொடர்ச்சியாக அரசாங்கம் தெரிவிக்கிறது, கொரோனா இல்லாவிட்டால் எமக்கு இந்த நெருக்கடி இல்லை என்கின்றனர்.

அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றின் இறக்குமதி, கட்டுமானப் பணிகளுக்கான மூலப் பொருள்கள் இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளன. அவ்வாறு செய்தும் டொலர் நெருக்கடியிலேயே நாம் இருக்கிறோம்.

அரசாங்கம் இந் நெருக்கடி தொடர்பில் எதிர்வரும் மாதங்களுக்கு எவ்வாறு செயற்பட போகின்றது என்பதை, நாட்டுக்குச் சொல்ல வேண்டும். இப்போது ராஜபக்ஷ வியாபார நிறுவனம், தனிப்பட்ட சொத்தாககருதிஎமதுநாட்டின்வளங்களை விற்கின்றது. இதுவா அரசாங்கத்தின் கொள்கை,என நாம் கேட்கின்றாம்.

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி ஆனதும் மெஜிக் செய்வார் என்றனர். ஆனால், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நிதிப் பிரச்சினையைத் தீர்ப்பார் என்று இப்போது சொல்கின்றனர்.

அவரது அமெரிக்கா முறையைப் பயன்படுத்தியாவது இந்த நெருக்கடிக்கு பதில் சொல்ல வேண்டும்.’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

# உயர்தர சான்றிதழ் கற்கை நெறி

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் கற்கைநெறிக்குரிய 2021 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரியூடாக 03.08.2021 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களுக்கு 021 222 3374 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அவற்றில் இரண்டு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

# உள்ளக இசை நிகழ்வுகளுக்கு அனுமதி

சுகாதார விதிமுறைகளுக்கமைய நேற்று(வெள்ளிக்கிழமை) முதல் உள்ளக இசை நிகழ்ச்சிளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளின் பிரகாரம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, மண்டபத்தில் 50 வீத மானவர்களின் பங்குபற்றுதலுடன் இசைநிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொது இடங்களில் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# ஆடி மாதம் நாடி வருகிறது!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

பன்னிரெண்டு மாதங்களும் வருகின்றன. போகின்றன. சில மாதங்களை சிறப்பென்றும், சிலவற்றை ஒதுக்கிப் பார்ப்பதும் இயல்பாகி விட்டது. ஆனால் அப்படி ஒதுக்க வேண்டியது – மனத்தில் எழுகின்ற ஒருவித மயக்கம் என்றே எண்ண வேண்டி இருக்கிறது. எல்லா மாதங்களும் ஏதோ ஒரு விதத்தில் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுதான் வருகின்றன. மார்கழியைப் பீடை பிடித்த மாதம் என்கிறோம். புரட்டாசியையும் ஒரு பக்கம் தள்ளியே வைக்கிறோம். ஆடியை மங்கலம் அற்ற மாதம் என்கிறோம். பங்குனியை, சித்திரையை, தையை, ஆவணியைக் கொண்டாடி வரவேற்கிறோம். இப்படி நோக்குவது எங்களிடம் இயல்பாகி விட்ட நிலையில், மங்கலம் இல்லா மாதமாக எடுத்துக் கொள்ளும் ஆடி எங்களை நாடி வருகிறது. வருகின்ற ஆடியை விட்டு விட்டு விலகத்தான் எங்களால் முடியுமா? முடியவே முடியாது. நாடிவரும் ஆடி பற்றிப் பார்ப்போமா வாருங்கள்.

ஆடி என்றவுடன் – ஆடிச்செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடிப்பூரம், ஆடிக்கார்த்திகை, ஆடித்தபசு, ஆடிப்பெருக்கு, ஆடி அமாவாசை, ஆடிப் பௌர்ணமி என்று இறை வழிபாட்டுடன் இணைந்ததாக ஆடி மாதம் முழுவதும் அமைந்திருக்கின்றது. ஆடி மாதத்தை அம்மனின் மாதம் என்றும் கூறுவர். அப்படி இருக்க ஆடியை நாடாமல் ஒதுக்கிப் பார்ப்பது முறையா?

மார்கழியில் திருவெம்பாவை வருகிறது. ஆண்டாளின் திருப்பாவையும், மணிவாசகரின் திருவெம்பாவையும் மார்கழியில் கோவில்களில் பக்தி சிரத்தையுடன் பாடப்படுகின்றன. வைணவர்களும், சைவர்களும் கொண்டாடும் மாதமாய் மார்கழி இருக்கிறது. மாதங்களில் நான் மார்கழி என்று கீதையில் கண்ணனே சொல்லுகிறான். புரட்டாசியில் நவராத்திரி வருகிறது. கலைகளைப் போற்றும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. சமயமும் கலைகளும் சங்கமிக்கும் மாதமாய் புரட்டாசி விளங்குகிறது. ஆடி,புரட்டாசி, மார்கழி இறைவழிபாட்டுக்குரிய மாதங்களாகும். அப்படி என்றால் மற்றைய மாதங்கள் இறை வழிபாட்டுக்கு ஏற்றன அல்லவா என்று வினா எழுகிறதல்லவா? ஆடி, புரட்டாசி, மார்கழி மாதங்களில் மங்கலமான நிகழ்வுகளான – வீடு குடிபுகுதல், திருமணம், திருமண நிச்சயார்த்தம், காது குத்தல் எதையும் செய்வதில்லை. காரணம் – இம்மாதங்கள் தேவர்களுக்கு உரிய மாதங்கள். மனிதர்களுக்கும் அவர்களின் இன்பங்களுக்கும் உரிய மாதங்கள் அல்ல என்பதுதான் காரணம்.

சூரியனை அடிப்படையாகக் கொண்ட மாதங்கள் தான் நம்முடைய தமிழ் மாதங்கள். கடக ராசியில்



சூரியன் சஞ்சரிக்கும் காலம்தான் ஆடி மாதம். ஆடி மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரையான ஆறு மாதங்களும் சூரியன் – தன்னுடைய வடக்கு நோக்கிய பயணத்தை முடித்துக் கொண்டு தெற்கு நோக்கிப் பயணிக்கிறார். தெற்கு என்பது பித்ருக்களுக்கு உரிய திசையாகும். இதனால் இம்மாதத்தை பித்ருக்குகளுக்கு வழி பாடாற்றும் மாதமாயும் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

மனிதர்களுக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். ஆடி தொடங்கி மார்கழி வரையான ஆறுமாதங்களும் சூரியனின் தெற்கு நோக்கிய பயணமாகும். தை தொடக்கம் ஆனி வரையான ஆறு மாதங்களும் சூரியனின் வடக்கு நோக்கிய பயணமாகும். வடக்கு நோக்கிய பயணக் காலத்தில் வெப்பம் அதிகமாய் இருக்கும். தெற்கு நோக்கி சூரியன் பயணிக்கும் பொழுது வெப்பம் தணிந்து – காற்று, மழை, பனி என்னும் காலநிலை வந்து நிற்கும். தெற்கு நோக்கிய சூரியனின் பயணக்காலம் தேவர்களுக்கு இராக்காலமாகும். அதாவது ஆடி என்பது தேவர்களின் இராக்கால தொடக்கமாகும். மார்கழி என்பது தேவர்களுக்கு விடியல் காலமாகக் கருதப்படுகிறது. ஆடி இரவின் தொடக்கம். மார்கழி விடியலின் தொடக்கம்.



ஆடியில் சூரியன் கடகராசியில் சஞ்சரிக்கிறார் என்று பார்த்தோம். கடகராசி என்பது சந்திரனின் ஆட்சி வீடாகும். சூரியன் சிவனின் அம்சமாகும். அந்தச் சூரியன் சக்தியின் அம்சமான சந்திரனில் சஞ்சாரம் செய்யும் நிலை இக்காலத்தில் அமைகிறது. இதனால் சந்திரனின் ஆளுமை அதிகரிக்கிறது. இப்படி ஆவதால் ஆடி மாதம் என்பது சக்தியின் மாதமாய் விளங்குகின்றது. அக்காரணத்தால்தான் அம்மனின் மாதம் – ஆடி என்று ஆகிவிட்டது. அம்மனுக்கு உகந்த விழாக்கள் இம்மாதத்தில் முக்கியத்துவம் பெறுவது இதனால் தானோ என்று எண்ணிட வைக்கிறது.

அறிவியல் வழியில் சிந்திப்பதும் உகந்ததாகும். ஆடி மாதம் காற்றுக் காலமாகும். காற்றினால் பரவும் நோய்கள் அதிகரிக்கும் காலமாகவும் இக்காலம் அமைகிறது. இதனால், வேப்பிலை, மஞ்சள் என்பவற்றை வழிபாடு என்ற வகையில் அம்மனுக்கு உரியதாக்கி நிற்பதும் நோக்கத்தக்கது. அத்துடன் கூழ் காய்ச்சுவதும், அம்மனுக்கு வைத்து வழிபடுவது கூட அறிவியலை ஆன்மீகத்துடன் இணைக்கும் நிலைதான்.

ஆடி மாதத்தை கணக்கிட்டுத்தான் பண்டிகைகளின் தொடக்கமே அமைகிறது என்பதும் நோக்கத்தக்கது. கிராமங்கள் தோறும் அம்மனுக்குரிய விழாக்கள் நடைபெறுவதும் மனமிருத்த வேண்டியதே. அம்மனைப் பல நிலைகளில் வழிபடுவதும் நோக்கத்தக்கது. காவல் தெய்வமாய் கருதி போற்றி வழிபாடுகளில் ஈடுபடுவதையும் ஆடியில் காணக்கூடியதாய் இருக்கிறது.

ஆடியில் ஆறுகளில் நீர்ப்பெருக்கு வருவதை அனைவரும் கொண்டாடி மகிழ்கின்றார்கள். இதனையே ஆடிப்பெருக்கு என்று அகமகிழ அழைக்கின்றார்கள். சுமங்கலிப் பெண்கள் தங்களின் தாலிக் கயிற்றை மாற்றுவதும், அம்மனுக்கு படையில் வைத்து ஆராதிப்பதும் இவ்வேளை இடம்பெறுகின்றன.

பெண்கள் விரும்பி அனுட்டிக்கும் விரதமான வரலட்சுமி விரதம் ஆவணி மாதத்துக்குரியதாய் இருந்தாலும், பெரும்பாலான சமயங்களில் ஆடி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் வருகிறது. ஆடி வெள்ளியில் மாரியம்மனுக்கு தேர்த்திருவிழா, தெப்பத்திருவிழா, தீமிதிப்பு எல்லாம் நடக்கும். அருள் மாரியாய் கருமாரி விளங்கிறாள் அல்லவா? சின்னக் கோவில்கள், பெரிய கோவில்கள் எல்லாம் இந்த விழாக்கள் நடைபெறுவதும் நோக்கத்தக்கது.

ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசையும், தையில் வருகின்ற அமாவாசையும், கடலில் நீராட உகந்த தினங்களாகும். தஷிணாயன புண்ணிய காலம், உத்தராயன புண்ணிய காலம் என்று இக்காலங்களைச் சிறப்பித்துச் சொல்லுவார்கள்.

இறைவனை அடைவதற்கு அன்னை பராசக்தி தவம் செய்ததும் ஆடி மாதத்தில்தான். சூடிக்கொடுத்த சுடர்கொடியான ஆண்டாள் நாச்சியார் ஆடியில்தான் அவதரிக்கின்றார். சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் அழைத்துக் கொண்டதும் ஆடியில்தான்.

தையினை பொங்கல் திருநாளாய், அறுவடைத் திருநாளாய் கொண்டாடுவதற்கு வித்திடப்படுவதே ஆடியில்தான். ஆடிப்பட்டம் தேடி விதை என்னும் பழமொழியே ஆடியில் விதைத்தால்தான் தையில் அறுவடை செய்ய முடியும் என்பதைக் காட்டி நிற்கிறதல்லவா?

ஆடிச் செவ்வாயினை மையமாய் கொண்டு ‘ஆடிச்செவ்வாய் தேடிக்குளி – அரைச்ச மஞ்சளைப் பூசிக்குளி’ என்னும் முதுமொழியும் பழக்கத்தில் இருக்கிறது.

ஆடி தெய்வீக மாதம், அம்மனின் மாதம் என்றெல்லாம் போற்றப்பட்டாலும் புதுமணத் தம்பதிகளுக்கு மட்டும் வெறுப்பான மாதமாய் இருக்கிறது. அவர்களுக்கு மட்டும் ஏன் வெறுப்பாய் இருக்கின்றது? மணமான தம்பதிகளைப் பிரித்து விடுவார்கள். அதாவது பெண்ணைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பி விடுவார்களாம். சாஸ்த்திரம் என்று சொன்னாலும் – இங்கே எங்களின் முன்னோர்களின் நல்ல சிந்தனையும் கலந்தே இருக்கிறது. ஆடியில் கருவுற்றால் – பத்தாவது மாதமான சித்தியிரையில் பிரசவம் நடக்கும். சித்திரையில் புத்திரன் பிறந்தால் தந்தைக்கு நல்லதல்ல என்னும் கருத்து சாதரணமாக சமூகத்தில் நிலவுகிறது. இது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. சித்திரையில் கத்தரி வெயில் என்பதை அனைவரும் அறிவோம். வெப்பம் கூடிய காலத்தில் பிரசவம் நடந்தால் காலநிலை காரணமாக பிரசவிக்கும் பெண் பெரும் வேதனைக்கு ஆளாவாள். பிரசவ வேதனையுடன் வெயிலின் கொடுமையும் பெருவேதனையைத் தந்துவிடும் என்பதால் மணப் பெண்ணை பிறந்த வீட்டுக்கு ஆடியில் அனுப்பிய எங்களின் முன்னோர்களின் சிந்தனையினைப் பாராட்டாமல் இருக்கத்தான் முடியுமா?

ஆடி என்றவுடன் ஆடிவேல் விழா அகத்தினில் அமர்ந்து விடும். எங்கள் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரும் கட்டாயம் வந்து நிற்பார். தாத்தாவின் வரவையும், அவரின் ஆடிப்பிறப்பு ஆனந்தமான பாடலையும் நினைவுக்குக் கொண்டுவருவதும் நாடிவரும் ஆடி அல்லவா?

**ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை**
**ஆனந்த மானந்தம் தோழர்களே!**
**கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்**
**கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!**

**பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்**
**பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,**
**வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல**
**மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,**

**வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே**
**வேலூரில் சக்கரையுங்கலந்து,**
**தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி**
**சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.**

**வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி**
**வெல்லக் கலவையை உள்ளே இட்டு**
**பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே**
**பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!**

**பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி**
**போட்டு மாவுண்டை பயறுமிட்டு**
**மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்**
**மணக்க மணக்க வாயூறிடுமே**

**குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே**
**குத்து விளக்குக் கொளுத்தி வைத்து**
**அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை**
**ஆடிப் படைப்பும் படைப்போமே**

**வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே**
**வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு**
**அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க**
**ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே**

**வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல**
**மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்**
**கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்**
**கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே**

நாடிவரும் ஆடி அமங்கலமான மாதம் அல்ல. அது தெய்வீக மாதம். கொழுக்கட்டையும் சாப்பிட்டு கூழும் குடித்து மகிழும் காலம். ஆடிப்பட்டம் விட்டு அம்மனை போற்றிக் கொண்டாடி , தோழர்களுடன் பாடி மகிழுவோம் வாருங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 68

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**201.பிரபாகரன் - பாலசிங்கம் இடையேயான இந்தக் கருத்து வேற்றுமைகள் பின் தீர்க்கப்பட்டனவா?**

பாலசிங்கம் திரும்ப நோர்வேயின் அறிவுறுத்தலில் விடுதலைப் புலிகளினால் கையளிக்கப்பட்ட ISGA இடைக்கால சபையால் முன்னெடுக்க பிரபாகரனோடு பேச்சுக்களுக்காக மே2004 வரும்வரை இது பனிப்போராத்தான் இருந்தது. புலம்பெயர் தேசங்களில் பல பகுதியினர் பாலசிங்கம் செய்தது தவறு, அதனால் தமிழீழக் கோரிக்கையை கொச்சைப்படுத்தி விட்டார், இந்திய ஒப்பந்தத்தையும் பின்னர் பேசப்பட்டவையையும் ஏற்க வேண்டாம் என புத்திகூறியவர் எப்படி இதனை ஏற்க முடியும், அதுவும் பிரபாகரனது சம்மதமில்லாமல் என்று குற்றம் வைத்தனர். அப்படி பாலசிங்கம் ஏற்றிருந்தாலும் சமாதானத் தீர்வு ஒன்றை சிறிலங்கா அரசு தரும் என்பதில் பிரபாகரனுக்கு நம்பிக்கையிருக்கவில்லை. போடுகின்ற அடியை கொஞ்சம் செம்மையாகப் போட்டால் எல்லோரும் இறங்கி வருவார்கள் என்றனர் தமிழ்ச்செல்வனும் மற்ற தளபதிகளும். அப்போது பாலா அண்ணை செய்தது ஒன்றும் பெரிய பாதிப்பைத் தராது, இப்பொழுது வேறொன்று (ISGA) அதற்கு மேல் தந்திருப்பதால் அதைத் தான் முன்னெடுக்க வேண்டும், அப்படி செய்தால் சரியாகிவிடும் என்ற சமாதானங்களும் இருந்தன.

**202.ஒஸ்லோ இணக்கத்துக்கும் இடைக்கால சபை (ISGA) க்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் இருந்தனவா?**

இருண்டவன் கண்களுக்கு மருண்டதெல்லாம் பேய். பார்ப்பவர்கள் கண்களைப் பொறுத்தது அது. அவர்களது மனோ பாவத்திலும் தங்கியுள்ளது என்பது போல. கூட்டாட்சியோ கூட்டமைப்பு ஆட்சியோ எல்லாமே பிரிவினைதான். ஆனால் இன்னுமொரு யதார்த்தத்தில் இரண்டுக்கும் இடையே பாரிய வித்தியாசங்கள் இல்லை. இரண்டுமே ஒரு நாட்டுக்குள் உட்பட்ட தீர்வு. தாயகக் கோட்பாட்டை அடிப்படையாக அமைந்தது. எவ்வளவு அதிகாரப் பரவல் நடக்கும், அதில் நடைமுறைப்படுத்தப்படும் அதிகாரங்கள் எவ்வளவு என்பதில்தான் வித்தியாசங்கள் இருந்தன. நல்லெண்ணங்கள் இருந்தால் அவை பேசித்தீர்க்கப்பட ஏதோ ஒன்றைப் பலப்படுத்தியோ அல்லது கலப்படமான அதிகாரங்களோடோ பயணித்திருக்கலாம். ஆனாலும் பாலசிங்கத்தின் சறுக்கல் நிவர்த்திக்கப்படவேண்டும் என்று குரல்கள் தொடர்ந்து இருந்ததால், பின்னர் நோர்வேயின் பேச்சுக்கள் குறித்த “போரும் சமாதானமும்” என்ற அவரின் 2004இல் புத்தகத்தில் ஒஸ்லோ தீர்மானத்தைக் கேள்விக்குறியாக்கி, அதனை அரசாங்கமும் நோர்வேயும் மிகைப்படுத்தின எனவும் அது விடுதலைப் புலிகளின் அரசியல் கோட்பாடுகளிலிருந்து மாறுபடவில்லை எனவும் விளக்கப்படுத்தி எழுதினார். உள்ளக சுயநிர்ணய உரிமையில் (Internal Self Determination) ஒரு தீர்வைப்பார்ப்போம் என இணங்கியது வெளிப்புற சுயநிர்ணய உரிமையை (External Self Determination) பாதிக்கவில்லை என அவர் வாதிட்டார். இவற்றிலிருந்துதான் நாங்கள் தேடுவது உள்ளக சுயநிர்ணய உரிமையா அல்லது வெளிப்புற சுயநிர்ணய உரிமையா என்று அலசி வாதிட்டுக் கொண்டிருக்கிறோம்.



சுனாமியின் பின்னான நடைமுறைத் திட்டத்துக்கு எதிராக வழக்கு வைத்தது ஜே.வி.பி.



சுனாமியின் பின்னான நடைமுறைத் திட்டம் தொடர்பான ஏற்பாடுகளில் புலிகள் ஒப்பமிட்டனர்.

**203.நீங்கள் பாலசிங்கத்தை அறிந்திருந்தீர்கள் தானே? அவரைப் பற்றிய உங்களது அனுமானம் என்ன?**

நான் அவரைப் விடுதலைப் போராட்டத்தில் துவக்க நாளகளில் இருந்து அறிந்திருந்தேன். பின்னர் 1987இல் இந்திய ஒப்பந்தத்திற்குப் பிறகும், தமிழ் மக்களின் புனர்வாழ்வு கழகத்தின் (TRRO) கந்தசாமி அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொல்லப்பட்ட பின்னரும் அவ்வளவாக நேரடித் தொடர்புகள் இருக்கவிலலை. அவர் கூறும் புத்திமதிகள் பற்றியும் நடக்கும் இடைஞ்சல்கள் பற்றியும் போராட்டத்தின் முன்னெடுப்புக்கள் பற்றியுமான கருத்துக்கள் மூன்றாம் தரப்புக்கள் மூலமே பரிமாறப்பட்டன. அனுமானம் என்பதைப் பின்னர் பார்க்கலாம்.

**204.பேச்சுவார்த்தைகளில் அடுத்த கட்டம் எங்கு நகர்ந்தது?**

சந்திரிகா, பேச்சுவார்த்தைகளை (ISGA) இடைக்கால சபையின் அடிப்படையில் தொடரலாம் என்ற ஆயத்தங்கள் செய்யப்பட்ட போது 26 டிசெம்பர் 2004 இல் சுனாமி பயங்கரமாக சிறிலங்காவைத் தாக்கியது. வன்னி, அம்பாறைப் பகுதிகளில் தமிழ் மக்கள் பெருவாரியாகப் பாதிக்கப்பட்டனர். அதே போல் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற சிங்கள பகுதிகளிலும் தாக்கங்கள் இருந்தன. ஆனாலும் தமிழ் பகுதிகளிலே பெருவாரியான அழிவும் உயிர்சேதமும் ஏற்பட்டிருந்தது. வெளிநாடுகளிலிருந்து பெருவாரியான நிதி உதவிகள் வர சாத்தியங்கள் இருந்ததால் சர்வதேசம் அவற்றை தமிழ்ப் பகுதிகளில் செலவிட விடுதலைப் புலிகளோடு அரசு ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என நிர்ப்பந்தித்திருந்தது. பல ஆழமான பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் 24 ஜூன் 2005 ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர். இந்த ஒப்பந்தம் ஏப்ரல் 2003 இல் இருந்து கைவிடப்பட்ட பேச்சுவார்த்தைகளை தொடரவேண்டும் என்று கண்டிமைப் படுத்தி 53 மில்லியன் டொலர்களை சுனாமி நிதி உதவியாகக் கையளிக்க ஒத்துக்கொண்டது. அதற்காக விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் முஸ்லிம் பிரதிநிதிகளும் இணைந்த அமைப்புக்கள் அவற்றை நிர்வகிக்க ஏற்பாடுகள் மேற்கோள்ளப்பட்டன. சுனாமியின் பின்னான நடைமுறைத் திட்டம் Post - Tsunami Operational Management Structure (P-TOMS) என்று அறியப்பட்டது. வழமைபோல் இந்த புரிந்துணர்வுகளுக்கும் அமைப்புக்கும் ஜே.வி.பியும் பௌத்த குரு பீடங்களும் ஜாதிக்க ஹெல உறுமையும் எதிர்ப்பு தெரிவித்து 16 ஜூன் 2005 இல் ஜே.வி.பி. அரசாங்கத்திலிருந்து வெளியேறியது. உதவி கொடுத்தோர், நலன்புரிச் சங்கங்கள், சர்வதேசம் எல்லாமே புரிந்துணர்வை வெகுவாகப் பாராட்டி இந்த ஒற்றுமையான கடமைப்பாடுகள் நல்லெண்ணத்தையும் வளர்த்து நம்பிக்கையையும் கூட்டும் என கருத்துக்கள் தெரிவித்தனர். ஆனால் வெளியேறியோர் அரசியல் இலாபத்தையே நோக்காகக் கொண்டு எதற்கும் இணங்கவில்லை. ஜே.வி.பி (P-TOMS) ஒப்பந்தத்திற்கு எதிராக 27 ஜூன் 2005 வழக்குப் பதிந்து அது அமுல் நடத்தப்படுவது தடைசெய்யப்பட வேண்டும் எனக் கோரியது.

**205.வழக்கில் என்ன நடந்தது?**

நாட்டிலே பல பகுதிகளும், வட கிழக்கின் முக்கால் பகுதி கரையோர நிலப்பரப்பும் சுனாமியால் பாதிக்கப்பட்டன. முழுத் தமிழ்ப் பகுதிகளும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்ததால் அரசின் உதவியின்றி அந்த பகுதிகளில் நிவாரண வேலைகளை முன்னெடுக்க முடியாது எனப் பலரும் அபிப்பிராயப்பட்டனர். அந்தப் அபிப்பிராயங்கள் நீதிபதிகள் வரையிலும் சென்றடைந்தன. ஆதலால் நீதிமன்றமும் மக்களுக்கான நிவாரணைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்றும் அப்படியில்லாவிட்டால் பலமாக பாதிப்படைந்த தமிழ்ப் பகுதி மக்கள் தொடர்ந்தும் அல்லல் படுவார்கள் எனத் தெரிவித்து (P-TOMS) யை அமுல்படுத்தலாம் என்று தெரிவித்தாலும் அதிகாரங்கள் ஜனாதிபதியின் கையிலிருந்து முற்றாக இன்னோர் அமைப்புக்கு மாறக்கூடாது என்றும் பணித்தது. அவை பற்றி ஆராய வழக்கை பின்னொரு திகதிக்கு தள்ளிப்போட்டது.

**206.அந்த திகதியில் என்ன நடந்தது?**

இடையில் இராமாயணத்தை நடத்திய கைகேயி, கூனி, சூர்ப்பனகையும் வாலி, சுக்கிரீவன் போன்றவர்களும், மகாபாரதத்தைக் கொண்டு சென்ற கர்ணன், அர்ஜுனன், துரியோதனன், துரோணர் எனப் பலர் வந்தார்கள். அவர்களது தாக்கங்களை வளங்கிக் கொள்ள வேண்டும்.

(வளரும்)

இந்த வாரம் இவர்

# உலகின் அத்தனை இதயங்களையும் ஒரு சேர கவர்ந்த புன்னகை அரசி

**ப்ரியமதா பயஸ்**



உலகின் அத்தனை இதயங்களையும் ஒரு சேர கவர்வதற்கு அதிர்ஷ்டம் மட்டுமல்ல, சில அடிப்படை தகுதிகளும் வேண்டும். இங்கிலாந்தின் இளவரசி டயானாவுக்கு அந்தத் தகுதி நிறையவே இருந்தது. அதிலும் மறைந்து பல வருடங்கள் முடிந்த நிலையிலும், இன்னும் பலர் அந்த மரணத்தை மறக்கவோ, நம்பவோ முடியாமல் ‘பெண்ணே.. எழுந்து வரமாட்டாயா?’,என்று கண்ணீர் விடும் பூங்கொத்துகளோடு உலகம் முழுக்க அவர் நினைவுநாளில் உருக்கமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எப்பேர்ப்பட்ட அதிர்ஷ்டம் இது பார்த்தவுடனே பளிச்சென்று மனசை அள்ளும் அந்தக் கனிவான சிரிப்பு.. இளவரசியே ஆனாலும் ‘இவ நம்ம வீட்டுப் பொண்ணு’ என்று சொல்லும்படியான அந்த அன்னியோன்யம், பந்தாக்களை விரும்பாத எளிமை என்று, டயானா மக்களுக்கு அறிமுகமான நாளிலிருந்தே அவர்களின் செல்லப் பெண்ணாகிவிட்டார்.

டயானா என்ற நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த, மென்மை சுபாவம் கொண்ட, அந்த அழகான இளம் பெண் மக்களுக்கு அறிமுகமானதே ஒரு சுவாரஸ்யமான கதை

லண்டனில் இருந்த ஒரு ஆரம்ப பள்ளிக்கூடம் அது. வெளியே இருந்து வந்த இரைச்சலான குரல்கள் கேட்டு அந்தப் பள்ளியின் அதிபர் திகைத்துப் போய் வெளியே வந்தார்.வெளியே பாடசாலையை ஃபோகஸ் பண்ணியபடி கமராக்கள், ரிப்போர்ட்டர்கள், டி.வி. மைக்குகள் என்று சுற்றிலும் பெரும் இரைச்சல் “என்ன வேண்டும் உங்களுக்கு?” என்று கேட்டார் அந்த அதிபர் .“உங்கள் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்க்கும் இளம் பெண்ணான டயானாவைப் பார்க்க வந்திருக்கிறோம்.


அவரை தயவு செய்து வெளியே வரச் சொல்லுங்கள்..” கோரஸாக குரல் வந்தது. அதிபர் திகைப்புடனே நிற்க “இங்கிலாந்து அரச குடும்பத்தின் இளவரசியாக டயானா ஆகவிருக்கிறார் என்ற விடயம் உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா? இந்த இளம் பெண் டயானாவும், இளவரசர் சார்லஸ்ம் காதலிக்கிறார்கள்.


“டயானா எப்படியிருப்பார்? அவர் முகத்தை நாங்களும் பார்க்க வேண்டும்.. படமெடுக்க வேண்டும், அவரை வெளியே வரச் சொல்லுங்கள் ” என்று கூட்டம் எகிற ஒரு சிறிய குழந்தையைக் கையில் தூக்கி வைத்தபடி உள்ளே, கதவருகே, நின்று கேட்டுக் கொண்டிருந்த டயானா தயக்கத்துடன் வெளியே வந்தாள்.

தயக்கமான பந்தா இல்லாத பார்வை, மிக எளிமையான ஒரு மெல்லிய பாவாடை என்று பக்கத்து வீட்டுப் பெண் போன்ற தோற்றத்தில் டயானா வர அத்தனை கமராக்களும் தங்கள் ஆசை தீர டயானாவின் உருவத்தை விழுங்கிக் கொண்டன.

அவளைப் பெருமிதத்துடன் “இவள்தான் எங்கள் இளவரசி ” என்று உலகம் முழுக்க அறிமுகப்படுத்தின. அன்று தொடங்கிய கமராக்கள்தான் பின்னர் டயானாவின் வாழ்க்கையில் அவரைத் துரத்தித் துரத்தி படமெடுக்கத் தொடங்கின. கடைசியில் கூட கமராவுக்கு பயந்தேதான் அந்த அழகான இளம் பெண்ணின் வாழ்க் கையே ஒரு முடிவுக்கு வந்ததும் நடந்தது. டயானா சார்லஸ் காதல் ஆரம்பமானது ஒரு விழாவில்தான்

எலிசபெத் மகாராணியின் செகரட்டரியைத்தான் டயானாவின் இரண்டாவது அக்கா ஜேன் திருமணம் செய்து கொண்டிருந்தார். அக்காவைப் பார்க்கச் சொல்லும் டயானா அவ்வப்போது அரண்மனை விழாக்களிலும் பங்கு கொள்வதுண்டு. தவிர டயனாவின் அப்பா அல்டாஃப், இங்கிலாந்து மன்னர் குடும்பத்தின் குதிரை





பராமரிப்பு வீரராக இருந்ததால் அரச குடும்பத்துடன் நெருங்கிப் பழகுவார்.

எப்போதும் புன்னகைத்துக் கொண்டே இருக்கும் இந்த இனிமையான இளம்பெண்ணை, இளவரசர் சார்லஸ் பார்த்தது அப்படி ஒரு விழாவில்தான். தனது திருமணத்தை நீண்டகாலம் நாள்களாகத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்த சார்லஸை முதல் பார்வையிலேயே கவர்ந்து விட்டாள் டயானா. இருவரும் நெருங்கிப் பழகத் தொடங்கினார்கள். ஒன்று மாற்றி மற்றொன்று என இளம் பெண்கள், பல ஆண்களோடு டேட்டிங் போவது வெளிநாட்டில் சகஜமாக இருந்தாலும், டயானா அந்த மாதிரி எந்த ஆணுடனும் பழகியதில்லை.

அவள் வாழ்க்கையில் முதன்முதலாக டேட்டிங் செய்ததே சார்லஸோடுதான் டயானாவின் அழகு, நடத்தை, மகன் சார்லஸின் பிடிவாதம் என்று பல காரணங்களுக்காக மகாராணி எலிசபெத்தும் இந்தத் திருமணத்துக்கு ஒத்துக் கொண்டார். இங்கிலாந்து அரச குடும்பத்தில் நடந்த முதல் காதல் திருமணமே சார்லஸ் டயானாவுடையதுதான்.

டயானா படம் பத்திரிகைகளில் வந்தவுடனேயே, இங்கிலாந்தில் ‘டயானா காய்ச்சல் ’ வெகு வேகமாகப் பரவத் தொடங்கியது. ‘டயானாவைப் போலவே இருக்கும் பெண் யார்?’எனும் தலைப்பில் ஒரு பிரபல பத்திரிகை போட்டியே நடத்தியது. அந்த அளவுக்குத் திருமணத்திற்கு முன்னரே பிரபலமாகி விட்டார் டயானா. அவர் நிற்பது, சிரிப்பது என எல்லாமே பரபரப்புச் செய்தியானது.

தேவதைக் கதைகளில் வருவதுபோல் டயானா சார்லஸ் திருமணம் உலகமே வியக்கும் படியாக, மிகப் பிரம்மாண்டமாக நடந்தது. திருமணத்தை நேரடியாக ஒளிபரப்பியது பி.பி.சி தொலைக்காட்சி. உலகமே அதை ஆவலுடன் ரசித்துப் பார்த்தது.

அரச குடும்பத்தின் மருமகளாகி விட்ட நிலையில் தன் கடமைகளைச் செய்வதில் மிகக் கவனமாக இருந்தார் டயானா. அரச குடும்பத்தினர் பொதுவாக வெளியுலகத்தினருடன் அதிகம் பட்டுக் கொள்ளாமல், ஏதாவது சில முக்கிய விழாக்களுக்கு மட்டும் செல்வதுண்டு ஆனால் டயானா, தன் இயல்பான இரக்க சுபாவத்தால், பாடசாலைகள்,மருத்துவமனைகள் போன்ற இடங்களுக்கு அதிகமாகச் செல்லத் தொடங்கினார்.

ஒரு வட்டத்திற்குள் தன்னைச் சுருக்கிக் கொள்ளாமல், எளிமையாக அவர் எல்லோருடனும் சகஜமாகப் பழக, அவரது இமேஜ் கிடுகிடுவென ஏறத் தொடங்கியது.

சார்லஸ் கூட ஒரு முறை “இப்போதெல்லாம் டயானாவுக்குக் கொடுக்கப்படும் பூங்கொத்துக்களைக் கலெக்ட் செய்வதே எனக்குப் பெரிய வேலையாகிவிட்டது ” என்று விளையாட்டாகக் குறிப்பிட்டார். மாமியார் ராணி எலிசபெத்துக்கு டயானாவின் மேல் தனிப்பாசம். டயானாவும் மாமியாரிடம் பிரியமாகப் பழகுவார்.

பிற்காலத்தில் மனசுக்கு சங்கடமான சில நேரங்களில், மாமியாருடன் சென்று பேசிக் கொண்டு இருந்ததுதான் டயானாவின் மனசுக்கு நிம்மதியளித்திருக்கிறது. அரச குடும்பத்தினரின் வாழ்க்கை முறை அவ்வளவாக சாதாரண மக்களுக்குத் தெரியாது.

அவர்களுடைய படங்கள் கூட எப்போதாவது தான் பத்திரிகைகளில் வரும். ஆனால் டயானா, வேல்ஸ் இளவரசியானதும் நிலைமை தலைகீழானது. அவர் தினசரி செய்யும் அனைத்துக் காரியங்களும் வரிசை மாறாமல் பேப்பரில் வர ஆரம்பிக்க,அரண்மனைக்குள் மெல்ல சூடு கிளம்ப ஆரம்பித்தது. மகாராணியே வேறு வழியில்லாமல் அனைத்துப் பத்திரிகைகளின் எடிட்டர்களையும் அரண்மனைக்கு வரவழைத்து, இனி டயானாவை போகுமிடமெல்லாம் படமெடுத்து தொந்தரவு செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

எல்லாம் ஒரு சில நாள்கள்தான் மறுபடி பழைய கதை தான். திருமணம் ஆன மறு வருடத்திலேயே முதல் மகன் வில்லியம் பிறந்தான். இரண்டு வருடங்கள் கழித்து அடுத்த குழந்தை ஹென்றி. இங்கிலாந்து அரச குடும்பத்தைச் சேர்ந்த யாரும் பள்ளிக்குச் சென்று படித்ததில்லை. ஆசிரியர்கள்தான் அரண்மனைக்கு வந்து பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். ஆனால், தன் மகன்கள் வியத்தில் இது தொடர டயானா விரும்பவில்லை.

அவர்கள் பள்ளிக்குச் சென்றுதான் படிக்கவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அப்போதுதான் மக்களோடு மக்களாகப் பழகும் வாய்ப்பு தன் குழந்தைகளுக்குக் கிடைக்கும் என்று டயானா நம்பினார்.

கணவரின் மேல் டயனா, அளவுக்கு அதிகமான காதல் கொண்டிருந்ததாலேயோ என்னவோ கேமிலா என்ற திருமணமான பெண்ணுடன் சார்லஸ்க்கு முன்பிருந்தே ஒரு உறவு இருந்து வருகிறது அது இப்போதும் தொடர்கிறது என்று தெரிந்த போது, அவரால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. திருமணமான முதல் வருடத்திலேயே இதனால் இருவருக்கும் பிரியம் குறைந்தது.

மனம் வெறுத்து டயானா சிலமுறை தற்கொலை முயற்சியில்கூட ஈடுபட்டிருக்கிறார். எதைச் சாப்பிட்டாலும் உடனே வாந்தி எடுத்துவிடுகிற (புலீமியா) நோய் கூட அவருக்கு வந்துவிட்டது. தன் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகளை மறக்க, பல சமூக நலத் திட்டங்களில் இன்னும் அதிகமாக ஈடுபட ஆரம்பித்திருந்தார் டயானா.அப்படித்தான் ஒரு முறை, எய்ட்ஸ் நோயாளி ஒருவருடன் டயானா கைகுலுக்கிய படம் பிரிட்டிஷ் நாளிதழ்களில் முதல் பக்கத்தைப் பிடித்தது எய்ட்ஸ் என்பது தொட்டாலே ஒட்டிக் கொள்ளும் வியாதி என்று பலரால் கருதப்பட்ட அந்தக் காலகட்டத்தில்,இளவரசியே இப்படி நடந்துகொண்டது, எய்ட்ஸ் குறித்த பல தவறான பயங்கள் நீங்க வழி வகுத்தது.

இந்தோனேஷியாவுக்கு சென்றிருந்தபோது அங்கிருந்த தொழுநோயாளிகளிடம் டயானா கைகுலுக்கியதும் பலரையும் வியக்க வைத்தது. குழந்தை ஹென்றி, பள்ளியில் சேர்க்கப்பட்ட காலகட்டத்தில் சார்லஸ் டயானா விரிசல் பகிரங்கமானது. தன்மேல் தவறில்லை என்பது போல் சார்லஸ் பி.பி.சி யில் பேட்டிகூட அளித்தார். தொடர்ந்து டயனாவையும் பேட்டி கண்டார்கள். “அரசராகும் எண்ணம் சார்லஸுக்கு இல்லை..”என்று, டயானா தன் பேட்டியில் பல விடயங்களை பகிரங்கப்படுத்த அது, இங்கிலாந்து மக்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கூடவே “நான் ராணியாக விரும்புகிறேன் ஆனால் சிம்மாசனத்தில் அமரும் ராணி அல்ல

மக்கள் மனங்களில் என்றென்றும் ராணியாக இருக்கவே விரும்புகிறேன்..” என்று டயானா கூறியது மக்கள் மனதில் பசை போட்டு ஒட்டிக்கொண்டது. காரணம் உதட்டிலிருந்து வராமல் அவரது உள்ளத்திலிருந்து வந்த வார்த்தைகள் இவை என்பது அவர்களுக்கு தெளிவாகத் தெரிந்திருந்தது. இருவரின் தொலைக்காட்சிப் பேட்டிகளும் ஒலிபரப்பான உடனே ‘மக்கள் யார் பக்கம்?’ என்று வேறொரு தொலைக்காட்சி நடத்திய கருத்துக் கணிப்பில் “தொலைக்காட்சி பேட்டிக்குப் பிறகு நாங்கள் டயானாவை மேலும் விரும்புகிறோம் ’ என்று எண்பத்து மூன்று சதவீதத்தினர் பதிலளித்து அசத்தினர்.


மக்கள் ஆதரவு டயானாவுக்குதான் என்பதை அறிந்தவுடன், பக்கிங்காஹாம் அரண்மனையும் டயானாவுக்கு வெளிப்படையான எதிர்ப்பு காட்டாமல் அடக்கி வாசித்தது. கமீலாவுடன் தனக்கிருந்த தொடர்பை பிறகு வெளிப்படையாக ஒத்துக் கொண்டார் சார்லஸ். டயானாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சம்பவங்களும் நடக்காமலில்லை. டயானாவின் குதிரைப் பயிற்சியாளரான ஜேம்ஸ் ஹெரிட் ஒரு நூலை வெளியிட்டார்.

அதில் டயானாவுடன் தான் நெருக்கமாக இருந்தது உண்டுஎன்று குறிப்பிட்டார். டயானா இதை மறுக்கவில்லை. ஆனால் “அவர் எனது மிக அரிய நண்பராக விளங்கியவர். அதுவும் சோதனையான ஒரு கட்டத்தில் அவரது அந்த நூல் வெளியாவதற்கு பத்து நாள்கள் முன்பு என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார் அவர்.

‘என் புத்தகத்தில் நீங்கள் கவலைப்படும்படியாக நான் எதையும் எழுதவில்லை’ என்றார். நானும் முட்டாள்தனமாக அதை நம்பினேன் ” என்று உடைந்து போய்ச் சொன்னார் டயானா. சார்லஸ்–டயானா விரிசல் இவ்வளவு பகிரங்கமான பிறகு விவகாரத்துதான் ஒரே வழி என்று மகாராணியே வற்புறுத்த, விவாகரத்து நடந்தது.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.




# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-** நாடாளுமன்றத்தில் தங்களுக்குப் பேச இடந்தருவதில்லை என்றும் அதனால் மக்கள் தங்களைத் தவறாய் நினைக்கிறார்கள் என்றும் கூட்டமைப்புக்குள் ஒருசிலர் போர்க்குரல் எழுப்புகிறார்களே. கவனித்தீர்களா?

**பதில் :-** கவனித்தேன். அவர்களிடம் இரண்டு கேள்விகளைக் கேட்கவேண்டும் என்று தோன்றுகின்றது. இதுநாள் வரைக்கும் அங்கு இவர்கள் பேசி என்னத்தைக் கிழித்தார்கள் என்பது முதற்கேள்வி. பேசாததால் மட்டுமா இவர்களை மக்கள் தவறாக நினைக்கிறார்கள் என்பது இரண்டாவது கேள்வி. நாடாளு



மன்றின் உள்நுழைந்த நம் தமிழ்த் தலைவர்கள் எல்லோரிடமும் இக்கேள்விகளைக் கேட்கலாம் போல் தோன்றுகிறது. எல்லோரும் பேச நினைக்கிறார்களே தவிரச் செயற்பட நினைப்பதாய்த் தெரியவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென வருடந்தோறும் ஒதுக்கப்படும் தொகையில், அந்தந்த வருடங்களில் தாம் செய்த பணிகளை, வருடமுடிவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பட்டியலாய் வெளியிட்டால் மக்கள் மனதில் அவர்கள் பற்றிய மதிப்பு உயரும். அதுதவிர, தம் சொந்த முயற்சியில் வருடந்தோறும் மக்களுக்காய்ச் செய்துவரும் பணிகளையும் இதேபோல அவர்கள் மக்களுக்குத் தெரிவிக்கலாம். இங்ஙனமாய் இவர்கள் வருடந்தோறும் வெளியிடும் பட்டியல்களைப் பரிசோதித்து, அதி உயர் பணியாற்றியவர்களுக்கு மட்டுமே அடுத்த தேர்தலில் ‘சீற்’ கொடுப்பது பற்றி அவர்களின் கட்சி முடிவு செய்யலாம். இவையெல்லாம் நடந்தால் நம் இனம் உருப்படும். ஒரு பேச்சாளனாய்ச் சொல்லுகிறேன். செயலோடு ஒப்பிட்டால் பேச்சு இரண்டாம் பட்சம்தான்.

உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ **‘சொற்களில் சிறந்தது செயல் என்பதுதான்.’ அண்மையில் வந்த சிவகார்த்திகேயனின் சினிமா வசனம். - எப்பூபூடி...?**

**2. கேள்வி:-** வடக்கில் புகழ்பெற்ற டாக்டர்கள் சிலரும், பத்திரிகையாளர் சிலரும், சில கட்சிகளிலிருந்து ஒதுக்கப்பட்ட தலைவர்கள் சிலரும் ஒன்று சேர்ந்து சில காலத்தின் முன்னர் பறை முழங்கிப் பூட்டிய அறை ஒன்றினுள் தமிழ் மக்கள் நலம் காக்கவென, உருவாக்கிய ‘தமிழ் மக்கள் பேரவை’யின் ‘அசுமாத்தத்தை’ அண்மைக் காலமாகக் காணமுடியவில்லையே. பேரவை இருக்



கிறதா? இல்லையா?

**பதில் :-** ஆராய வேண்டிய கேள்விதான். மக்களோடு ஒன்றுபடாத அந்தக் கூட்டத்தார், ‘இனஎழுச்சி’ என்று பேசியதெல்லாம் வெறும் ‘பம்மாத்துத்’ தான் என்பது எனக்கு எப்போதோ தெரியும். அந்நேரத்தில் கூட்டமைப்புக்குள் குழப்பம் ஏற்படுத்தத் தொடங்கியிருந்த மு.முதலமைச்சரை முன்வைத்து கூட்டமைப்பை உடைப்பதுதான் அவர்களின் நோக்கமாய் இருந்தது. மக்கள் நலம் என்ற பேச்செல்லாம் வெறும் ‘டுப்பு’த் தான். மக்கள் நலம் பற்றிய கூட்டத்தை, பூட்டிய அறைக்குள் ஏன் நடத்தவேண்டும்? என்ற கேள்வி அப்போதே எழுந்தது. ஏதோ பிழையான இடத்திற்கு வந்து அகப்பட்டு ஓடுபவர்கள் போல, பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்வதைத் தவிர்த்து மு.முதலமைச்சர் உட்பட எல்லோரும் தலைதெறிக்க ஓடிய வேகம் அப்போதே சந்தேகத்தை ஏற்படுத்தியது. மக்கள் நலனே நம் நோக்கம், அரசியல் தங்களது நோக்கமில்லை என்றவர்கள், பிறகு, தமது கூட்டம் ஒன்றில் வைத்தே முதலமைச்சரைப் புதிய கட்சி ஆரம்பிக்க அனுமதித்தனர்.

அப்படிக் கிளர்ந்தெழுந்தவர்களில் இருந்த டாக்டர்கள், மீண்டும் பணத்தைக் குவிக்கும் தங்கள் தொழிலைப் பார்க்கச் சென்றுவிட்டனர். மு.முதலமைச்சர் அந்த எழுச்சியைப் பயன்படுத்திப் நாடாளுமன்றத்திற்குப் போய்விட்டார். பத்திரிகையாளர் மீண்டும் தன் தொழில் வளர்க்கும் முயற்சியைத் தொடர்கிறார். இங்கு ஒரு புதிய கட்சி பிறக்கும், அதிலாவது தமக்குக் கௌரவமான வாழ்வு கிடைக்கும் என்று நம்பி வந்த சில ஒதுக்கப்பட்ட கட்சிக்காரர்கள், இரண்டு தோணியில் கால் வைத்தவர்கள் போல ‘அந்தரித்து’ நிற்கிறார்கள். இப்போது அவர்கள் மீண்டும் பிறந்த ‘வீடு’ தேடிவந்து ரோசமாய் உரிமைக்குரல் எழுப்புவதும், பின்னர் கொஞ்சமும் ரோசமின்றி அவ் உரிமைக்குரலைக் கைவிடுவதுமாய்க் காலம் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். மொத்தத்தில் ஏமாந்தவர்கள் மக்கள்தான்.

உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ **பேரவை வெறும் பேர் அவையாயிற்று. ஹி.. ஹி..**

**3. கேள்வி:-** கோயிலுக்குப் போகாமல் கடவுளைக் கும்பிட முடியாதா?

**பதில் :-** முடியாதென்று யார் சொன்னது? தாராளமாய்க் கும்பிடலாம். ஆனால் ஒன்று, கோயிலுக்குப் போய் கும்பிடுவதை விடப்போகாமல் கும்பிடுவதற்கு நிறைய மனஉறுதி வேண்டும். ஒரு பாடசாலைக்குச் சென்று வகுப்பிலிருந்து ஆசிரியர் வழிகாட்ட, படித்துப் பரீட்சை எழுதிப் ‘பாஸ்’ பண்ணுவதற்கும் இவை எவற்றையும் செய்யாமல் தானாகப் படித்துப் பரீட்சை எழுதிப் பாஸ் பண்ணுவதற்கும் உள்ள வித்தியாசம்தான் மேற்சொன்ன இரண்டுக்குமுள்ள வேறுபாடு. உங்களுக்கு எது வசதியோ அதைச் செய்யலாம். பாஸ் பண்ணுவது முக்கியம்.

உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ **‘சூம்மில’ படிக்கிறதப் பற்றிச் சொல்லுறாரோ?**

**4. கேள்வி:-** ஐயா! உங்கள் எழுத்துக்களைத் தொடர்ந்து படித்து வருகிறேன். உங்கள் அரசியல் கருத்துக்கள் எப்பவும் கூட்டமைப்புக்கு ஆதரவாக இருப்பதன் நோக்கம் என்ன? கருத்துக்கள் அறம் சார்ந்து வருவதில் தயக்கம் ஏன்?

**பதில் :-** கூட்டமைப்புத்தான் உயர்ந்தகட்சி! அதிலிருக்கும் தலைவர்கள் தான் சிறந்த தலைவர்கள்! அவர்களை விட்டால் தமிழர்களுக்கு வேறு கதியில்லை! - என்ற எண்ணத்தில், நான் அவர்களை ஆதரித்து எழுதவில்லை. அவர்கள் பற்றி என் மனதிலும் பல குறைகள் உள்ளன. கட்சியை நடத்துவதில் உள்ள ஜனநாயகமின்மை, மக்கள் தொடர்பாடலில் காட்டும் அலட்சியம், பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்காமல் நழுவும் போக்கு, தங்கள் பலத்தைவிட எதிரிகளின் பலவீனத்தை வைத்து அரசியல் நடத்த நினைக்கும் கீழ்மை, உட்கட்சிப் பூசல்கள் என அக் குறைகள் பல வாய் விரியும். இவை தெரிந்தும் நான் அவர்களை ஆதரிப்பதற்கு ஒரேயொரு காரணம் தான் இருக்கிறது. போரில் உடைந்த எம் இனத்தின் முதுகெலும்பு, இன்னும் நிமிராத நிலையில் பேரினத்தாரோடும், உலக நாடுகளோடும் தொடர்பு கொண்டு நம் இனத்திற்குத் துணை செய்ய, உள்ளதில் வள்ளிசான ஓர் ஊன்றுகோல் தேவைப்படுகிறது. தமிழ்த் தலைமை என்ற பெயரில் இயங்கிவரும் மற்றைய கட்சிகளோடு ஒப்பிடும்போது இவர்கள் சற்று மேம்பட்டு நிற்பதால்தான் இவர்களைச் சிலவேளைகளில் ஆதரித்து எழுதுகிறேன். இவர்களது குறைகளை எழுத்தாலும் பேச்சாலும் பல இடங்களில் சுட்டிக்காட்ட நான் தவறியதில்லை. மொத்தமாக நம் தமிழ்த் தலைமைகளுக்கு, நாடாளுமன்றப் பதவியும், அதனால் வரும் புகழும், அங்கு கிடைக்கும் பணமும் தான் முக்கிய நோக்கமாய் இருக்கின்றன. தேர்தல் காலத்தில் மட்டும் உண்டாகும் இவர்களின் வீரியமான




மக்களை நோக்கிய செயற்பாடே, நான் சொல்லும் இக் கூற்றுக்குச் சாட்சி. யதார்த்தம் அறிந்தும், உலக அரசியல் அறிந்தும், சூழ்நிலையைக் கணித்தும் இயங்குவதால் தமிழர் பிரச்சினையில் கூட்டமைப்பினரைத்தான் உலகநாடுகள் முக்கியப்படுத்துகின்றன. அதையும் நீக்கிவிட்டு இனம் எழ முடியாது என்பதால்தான் அவர்களை நான் ஆதரித்து எழுதிக் கொண்டிருக்கிறேன்.

உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ **குளிருக்கு, கிழிஞ்ச கம்பளி கிடைச்சாலும் வாங்கிப் போர்க்க வேண்டியது தான். வேறு வழி?**

**5. கேள்வி:-** பிராமணர்களை நாம் கட்டாயம் மதித்துப் போற்றத்தான் வேண்டுமா?

**பதில் :-** நிச்சயம் போற்றத்தான் வேண்டும்.காரணம் பேரறிவாளிகளான நம் தமிழ்ப்புலவர்கள் பலர் அக்கருத்தை வலியுறுத்துகிறார்கள். ‘அந்தணர் என்போர் அறவோர்’ என அந்தணரின் பெருமையை வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறார். ‘தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்’ என்று நமது சுந்தரர் சொல்லியிருக்கிறார். ‘கரியமாலினும் கண்ணுதலானினும் பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால்’ என்று எங்கள் கம்பன் சொல்லியிருக்கிறான். இப்புலவர்கள் சொன்னால் அது சரியாகத்தான் இருக்கும். இவர்கள் எல்லாம் சொல்லும்போது அந்தணரை நாம் மதித்துத்தான் நடக்கவேண்டும்.

ஆனால் ஒன்று. ‘எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுதல்’, ‘அறுதொழில் செய்தல்’, ‘பிறப்பொழுக்கம் குன்றாமை’, ‘எக்காரணம் கொண்டும் ஆசாரங்களைக் கைவிடாமை’, ‘உலகுயிர்கள் அனைத்திற்குமாக வழிபாடு செய்தல்’, ‘தாம் கற்ற வேதமந்திரங்களின் ஆற்றலால் இயற்கையைக் கட்டுப்படுத்துதல்’ போன்ற பல தகுதிகளும் பிராமணர்களுக்கு இருக்க வேண்டும் என்றும் இந்தப் புலவர்கள்தான் சொல்கிறார்கள். இத்தகைய தகுதியுடையவர்களைத்தான் போற்றியும் மதித்தும் நடக்கவேண்டும் என்பது அவர்களது கருத்தாய் இருக்கிறது. அளவுகோலைத் தந்துவிட்டேன். இனி அதைக்கொண்டு நடந்து, யாரைப் போற்றவேண்டும்,யாரைப் போற்றக்கூடாது என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ **தடவிப்போட்டுக் குத்திறதென்கிறது இதைத்தான். வாரிதியார் வடிவாய்த் தடவியும் இருக்கிறார். குத்தியும் இருக்கிறார். ஹி.. ஹி..**

காலைக்கதிர் Kalaikkathir

# கொத்தலாவல சட்டமூலத்தை கிழித்தெறி!

## அரச அடக்குமுறைக்கு எதிராக யாழில் போராட்டம்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

**கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்க உறுப்பினர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தியும், கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிராகவும் யாழ்ப்பாணத்தில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.**

**யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்னால் காலை 10 மணி முதல் 11 மணி வரையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.**

தனிமைப்படுத்தல் சட்டத்தை அடக்குமுறைக்காக பயன்படுத்தாதே!, ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தனிமைப்படுத்தப் பட்டவர்களை உடனே விடுதலை செய்!, கொத்தலாவல மசோதாவை கிழித்தெறி! போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷம் எழுப்பி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், அரசின் அடக்குமுறை மற்றும் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக அனைவரும் ஓரணியில் திரண்டு தமது எதிர்ப்பை வெளியிட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர் சங்கத்தினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## யாழ். மாநகர சபை எல்லைக்குள் கொரோனாவால் 32 பேர் மரணம்

### 1,657 பேர் தொற்றுடன் அடையாளம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் இந்த வருடத்தின் இதுவரையான காலத்தில் 1,657 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் 32 பேர் மரணமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு முழுமையாகவும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவின் 10 கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கிய யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழே மேற்கண்ட தரவு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் குறித்த காலப் பகுதியில் 12 ஆயிரத்து 262 பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 1,657 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். 32 பேர் கொரோனா காரணமாக மரணமடைந் துள்ளனர்.

இக் காலப் பகுதியில் 2 ஆயிரத்து 107 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 96 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ். மாநகர சபை எல்லைக்குள் இதுவரை 16 ஆயிரத்து 223பேருக்கு முதலாவது தடுப்பூசியும், 6 ஆயிரத்து 158 பேருக்கு இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளன.

### ரிஷாத்தின் வீட்டில் பணியாற்றிய வேளை

## தீக்காயங்களுக்குள்ளான 16 வயது சிறுமி உயிரிழப்பு

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிக் கொண்டிருந்த போது தீக்காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 16 வயது யுவதி உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, பௌத்தாலோக மாவத்தையிலுள்ள ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றி வந்த நுவரெலியா, டயகம பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமி, கடந்த ஜூன் 3ஆம் திகதி தீக்காயங்களுக்குள்ளான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி குறித்த சிறுமி நேற்று உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண நேற்று தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு குறித்த சிறுமி ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப் பெண்ணாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜூன் 3 ஆம் திகதி அவர் சமையலறைக்கு அடுத்ததாகத் தங்கியிருந்த அறையொன்றில் இருந்து உடைகள் தீப்பிடித்த நிலையில் வெளியே வந்தார் எனவும், இதன்போது, வீட்டில் இருந்தோர் அவரை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுமி நேற்று உயிரிழந்ததைத் தொடர்ந்து ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்குச் சென்ற நீதிவான், அங்கு தீப்பற்றிய அறையில் ஆய்வு நடத்தியுள்ளதுடன், சிறுமியின் மரணம் குறித்து பிரேத பரிசோதனை நடத்துமாறு பொரளைப் பொலிஸாரைக் கோரியுள்ளார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் வீட்டில் இருந்தவர்களிடம் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ள பொரளைப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் பொலிஸ்பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## 15 இலட்சம் மொடர்னாத் தடுப்பூசிகள் இலங்கைக்கு அமெரிக்கா நன்கொடை

### நேற்று காலை வந்தன நாட்டுக்கு

கொவேக்ஸ் திட்டத்தின் கீழ் அமெரிக்காவினால் 15 லட்சம் மொடர்னாத் தடுப்பூசிகள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் இருந்து நேற்று காலை அந்தத் தடுப்பூசி தொகை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

மொடர்னாத் தடுப்பூசிகள் 'கொவேக்ஸ்' ஊடாக இலங்கைக்கு வந்துள்ளதை, அமெரிக்க மக்கள் சார்பாக அறிவிப்பதில் நான் பெருமையடைகின்றேன். இந்த நன் கொடை உயிர்களைப் பாதுகாக்கவும் இலங்கை மக்களின் அவசர சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்யவும் பொருளாதாரப் பாதிப்பு களைத் தணிக்கவும் உதவும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்குக்கிடைத்துள்ள மொடர்னா தடுப்பூசிகளை கண்டி மாவட்டத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

## விசுவமடு பாரதி மகா வித்தியாலயத்தில் 24 மாணவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்கு

### 9 மாணவர்களுக்கு மேலதிக சிகிச்சை

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு, விசுவமடு பாரதி மகா வித்தியாலயத்தில் கற்றலுக்காகச் சென்ற மாணவர்கள் 24 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி, மூங்கிலாறு பிரதேச வைத்தியசாலையில் நேற்று காலை 8.30 மணியளவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 9 மாணவர்கள், மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

குறித்த பிரதேசத்தில் தொலைத் தொடர்பு வசதிகள் சீரின்மையால் மாணவர்கள் இணையவழிக் கல்வியை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக கற்றல் மத்திய நிலையமாக பாடசாலை இயங்கிய வேளையிலேயே, இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

## தனிமைப்படுத்தலிலிருந்து தம்பாட்டி நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், புத்தளம் மாவட்டங்களில் மேலும் இரண்டு பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன என்று கொரோனா பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, யாழ்ப்பாணம், நாரந்தனை வடமேற்கு கிராம சேவகர் பிரிவு (தும்பாட்டி) நேற்று காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புத்தளம், ஜே.பி. வீதியின் 9 ஆம் குறுக்குத்தெரு பகுதியும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவத் தளபதிமேலும் குறிப்பிட்டுள்ளார்.

## உலகின் அத்தனை...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன் 79 விலையுயர்ந்த உடைகளை ஏலத்தில் விட்டு அதன் மூலம் கிடைத்த பெருந்தொகையை தர்மகாரியங்களுக்கு செலவிட்டார். அரபு நாட்டைச் சேர்ந்த கோடிஸ்வரரான முகமது ஹல் என்பவரின் மகன் டோடியுடன் டயனாவுக்கு ஏற்பட்ட நெருக்கம் புதிய சர்ச்சைகளுக்கு இடம் கொடுத்தது. இருவரும் பாய்மரக் கப்பலில் உற்சாகம் பொங்க பயணம் சென்றது பத்திரிக்கைகளுக்குப் பெரும் தீனியைக் கொடுத்தது.

இருவரும் செல்லுமிடமெல்லாம் கேமராவும் கையுமாய் பத்திரிகைக்காரர் கள் அவர்களைத் துரத்தினார்கள். டோடியும் டயானாவும் பிரான்ஸில் தனிமையில் இருக்க ஆசைப்பட,பத்திரிகைகாரர் களால் அது முடியாமல் போனது. பாரீஸின் ரிட்ஸ் உணவகத்தில் மாலை உணவுக்குப் பின் காரில் டயானா, டோடி, ஒரு பாதுகாப்பாளர் மற்றும் ஓட்டுனர் போய்க் கொண்டிருந்தார்கள். விடாமல் அவர்கள் காரைத் துரத்தியது வேறு ஒரு வாகனம்.

அதில் பத்திரிக்கைப் புகைப்படக்காரர்கள். அவர்களிடமிருந்து தப்பியே ஆக வேண்டும் என்ற வேகத்தில் மணிக்கு 150 கிலோமீட்டர் வேகத்தில், பறந்தது டயானாவின் கார். விளைவு? கோரவிபத்து டோடியும், கார் ஓட்டுனரும் அந்த இடத்திலேயே மரணமடைய,உயிருடன் இருந்த டயானாவை மட்டும் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

அழகான தேவதை போன்றே பார்த்துப் பழகிய டயானாவை, முகமும் எலும்புகளும் சிதைந்த நிலையில் பார்த்த மருத்துவர்கள் கூட அடக்க முடியாமல் கதறி அழுதனர்.

எவ்வளவு முயன்றும் அந்த புன்னகை இளவரசியை காப்பாற்ற முடியவில்லை. அவர் இறந்த செய்தி கேள்விப்பட்ட உலகமே வேதனையில் உருகி கண்ணீர் விட்டது.

பல்லாயிரக்கணக்கான மலர்கள் அந்த இனிமையான இளவரசியின் கல்லறைக்கு இன்னமும் வந்து குவிந்து கொண்டிருக்கிறது. அவர் மீது மக்கள் வைத்திருக்கும் அன்புக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது.




# தனிமைப்படுத்தல் சட்டம் எவருக்கு விதிவிலக்கல்ல!

## சுகாதார அமைச்சர் கூறுகிறார்

தனிமைப்படுத்தல் சட்டம் எவருக்கும் விதிவிலக்கானது அல்ல என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் போராட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

கொரோனா தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுபவர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு நாட்டு மக்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டும். இந்தச் சட்டம், ஜோசப் ஸ்டாலின், பியுமி ஹன்சமாலி ஆகியோருக்கு மாத்திரம் விதிவிலக்கானது அல்ல.



கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள உலக சுகாதார தாபனம் பரிந்துரைத்துள்ள சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை முறையாகப் பின்பற்றினால் வைரஸ் தொற்றில் இருந்து மீளலாம். இதன் காரணமாகவே சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. கொரோனா விடயத்தில் சுயநலமாக எவரும் செயற்படமுடியாது.

நாட்டு மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு முரணாக செயற்படுபவர்களைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஒரு தரப்பினரது பொறுப்பற்ற செயற்பாட்டின் காரணமாக மீண்டும் நெருக்கடியான சூழ்நிலைக்குச் செல்ல முடியாது.

கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் நிறைவு பெறும். நாட்டு மக்கள் மத்தியில் அரசியல் ரீதியிலும், சமூகஞ்சார் ரீதியிலும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு போராட்டத்தில் ஈடுபடும் தருணம் இதுவல்ல, ஆகவே போராட்டங்களில் ஈடுபடுவதை சிவில் தரப்பினரும், தொழிற்சங்கத்தினரும் முழுமையாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
– எனக் குறிப்பிட்டுள்ளார்.







# துயர் பகிர்தலும் நன்றி நவிலலும்

22 . 11 . 1937



19 . 06 . 2021

## வேலுப்பிள்ளை குணசிங்கம்

(ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் கரவெட்டி மேற்கு, உடையாப்பா வளவினை பிறப்பிடமாகவும் கரவெட்டி மத்தி வீரபத்திரர் கோவிலடியை வசிப்பிடமாகவும் ஒய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தருமான வேலுப்பிள்ளை குணசிங்கம் அவர்கள் தனது 84வது வயதில் 19.06.2021 சனிக்கிழமை இயற்கையெய்தினார். அன்னார் மறைந்த வேலுப்பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் புத்திரரும் மங்கையற்கரசி, காலஞ்சென்ற விசாலாட்சி, புவனேஸ்வரி, சிவபாக்கியம் மற்றும் தியாகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் ஜெயந்தன் (ஆஸ்திரேலியா), மிகுந்தன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), துஷ்யந்தன் (ஆஸ்திரேலியா), சுகந்தன் (கனடா) மற்றும் குமுதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராதா (ஆஸ்திரேலியா), துஷ்யந்தி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கவிதா (ஆஸ்திரேலியா), மஞ்சுளா (கனடா), இரகுநாதன் (சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிந்துஜா, ஷோபனா, கிஷாந்த், மிதுறிகா, துமிலன், வக்ஷலன், விதுஷா, கீரன், வித்தகி, லசானி, மிதுஷா, மற்றும் அகரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 19.06.2021 சனிக்கிழமை கரவெட்டி மத்தி வீரபத்திரர் கோவிலடியிலமைந்த அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்றையதினம் பிற்பகல் 2.00மணிக்கு கரவெட்டி சோனப்பு மயானத்தில் தீயுடன் சங்கமமானது. அன்னார் சுகவீனமுற்றிருந்த காலங்களில் அவருக்கு வைத்தியம் செய்த அனைத்து மருத்துவர்களுக்கும் தாதியருக்கும் ஊழியர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றோம். அன்னாரின் பிரிவு நிகழ்வில் பங்கெடுத்து, செய்திகள் அனுப்பியும் தொலைபேசியில் உரையாடியும் துயர்பகின்ற அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்;. அன்னாரின் இறுதியாத்திரைக்கு சிறிய எண்ணிக்கையான உறவுகளே அனுமதிக்கப்பட்டமையாலும் அவரின் இன்றைய அந்தியேட்டி நிகழ்விற்கும் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டியிருப்பதாலும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

